பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 16 | வெள்ளிக்கிழமை 02.11.2018 | கதிர் 361

**இனி இது ரகசியம் அல்ல!**

கொழும்பு அரசியல் நிலைவரம் மணிக்கு மணி மாறிக்கொண்டிருக்கின்றது.

திங்களன்று நாடாளுமன்றம் கூடும் என நேற்றுக்காலை செய்தி வெளியானதும் *''ஓ அப்பிடியா....! தேவையான குதிரைப் பேரம் முடிந்து விட்டது, போதுமான ஆள்கள் திரட்டியாகி* பக்கம் 02

# திங்களன்று நாடாளுமன்று கூடுமா? மௌனம் காக்கிறார் மைத்திரிபால

## சபாநாயகர் இன்று முக்கியத்துவமிக்க சந்திப்பு

கொழும்பு, நவம்பர். 02

**நாடாளுமன்றத்தைத் திங்களன்று கூட்டுவது தொடர்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றிரவு அறிவித்தது.** பக்கம் 11

## நாடாளுமன்றைத் திங்கள் கூட்டுவதில் மைத்திரி தரப்புக்குள் பெரும் குழப்பம்

கொழும்பு, நவ. 02

நாடாளுமன்றைத் திங்களன்று கூட்டுவதில் ஜனாதிபதி மைத்திரிபால தரப்புக்குள் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்றை எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை பக்கம் 11

## அரசியல் குழப்பத்துக்கு முடிவுகட்ட இந்தியாவும் நேரில் களமிறங்கியது

கொழும்பு, நவ 02

இலங்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவா? மஹிந்த ராஜபக்ஷவா? என்ற குழப்ப நிலை சர்வதேச ரீதியில் சூடு பிடித்துள்ளதையடுத்து இதற்கு முடிவு கட்டும் வகையில் இந்தியாவும் நேரில் களமிறங்கியுள்ளது. பக்கம் 11

### சம்பந்தனுடன் இரகசியப் பேச்சு



## நவம்பர் 16 இல் தான் நாடாளுமன்று கூடும்

### மஹிந்த தரப்பு புதுத் தகவல்

கொழும்பு, நவ. 02

நாடாளுமன்றம் வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை கூட்டப்படமாட்டாது என்றும் முன்னர் அறிவிக் பக்கம் 11

## பெரும்பான்மையை நிரூபித்தாலும் ரணிலுக்குப் பதவி கிடைக்காது

### உதய கம்மன்பில கூளுரை

கொழும்பு, நவ. 02

நாடாளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்தாலும், அவருக்கு பக்கம் 11

## சிறுபான்மைக் கட்சிகளே ரணிலுக்குக் கைகொடுப்பர்

### கூறுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, நவ. 02

நாடாளுமன்றம் கூடும்போது சவாலில் வெற்றிபெற்று மீண்டும் ரணில் அரசு உதயமாகுமானால் பக்கம் 11

## மஹிந்தவைப் பிரதமராக சபாநாயகர் ஏற்கவில்லை

### ஐ.தே.கவினர் விடாப்பிடி



கொழும்பு, நவ. 02

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை சபாநாயகர் கரு ஜெயசூரிய ஏற்றுக் கொள்ளவில்லை பக்கம் 11

## கோட்டாவுடன் ரணில் தொலைபேசியில் பேச்சு

கொழும்பு, நவ. 02

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியுள்ளார். பக்கம் 11

## பெற்றோல், டீசல் விலை அதிரடியாகக் குறைப்பு!

கொழும்பு, நவ. 02

எரிபொருள்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் குறைக்கப்படுவதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

92 ஒக்ரைன் பெற்றோல் வகைகள் 10 ரூபாவால் குறைக்கப்படுவதாகத் தெரிவிக்கப் பக்கம் 11

## சீனி, கோதுமையின் விலையும் குறைப்பு

கொழும்பு, நவ. 02

சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் மீதான தீர்வை குறைக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

சீனி மீதான சிறப்பு வரி 10 ரூபாவாலும் பருப்பு மற்றும் பக்கம் 11

## பிரதமர் ஆசனம் மஹிந்தவுக்கே

### சபாநாயகர் அலுவலகம் அறிவிப்பு

கொழும்பு, நவ. 02

நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு உரிய ஆசனத்தைப் புதிய பக்கம் 11

## பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பது கட்டாயமல்ல!

### கூறுகிறார் மஹிந்த சமரசிங்க

கொழும்பு, நவ. 02

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கூட்டினாலும் கூட, புதிய அரசு பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவேண்டிய பக்கம் 11

## ஜனநாயகத்தை வலுப்படுத்த இலங்கைக்கு அமெ. உதவும்

### புதிய தூதுவர் நேற்று அறிவிப்பு



கொழும்பு, நவ. 02

நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்தி, அனைவருக்கும் மனித உரிமைகள் உறுதிபடுத்தப்பட்ட எதிர்காலமொன்றை ஏற்படுத்துவதற்கு ஒன்றுபட்டு உதவத் தயாராக உள்ளார் என இலங்கைக் பக்கம் 11

## பெரும்பான்மையை நிரூபிக்க இரு தரப்பினரும் பிரயத்தனம்

### தெற்கு அரசியலில் குதிரைப் பேரமும் உச்சம்

கொழும்பு, நவ. 02

நாடாளுமன்றம் கூடும்போது பெரும்பான்மைப் பலத்தை உறுதிபடுத்திக் கொள்வதற்காக ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், மைத்திரி – மஹிந்த கூட்டணியும் கடும் பக்கம் 11

## மஹிந்தவைச் சந்தித்தார் ராணுவத் தளபதி மகேஷ்



கொழும்பு, நவ. 02

நீடித்து வரும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் – பிரதமர் யார் என்பது குறித்து பக்கம் 11

## சிங்களத்தின் போராட்டம் இது தமிழருக்குத் தொடர்பில்லையாம்

### நீதியரசர் விக்கி கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,ஒக்.02

இப்போது கொழும்பில் தமது அதிகாரத்துக்காகச் சிங்களத் தலைவர்கள் போராடுகின்றார்கள். அதற்கும் எமக்கும் தொடர்பில்லை. பக்கம் 02

# பாக். தூதுவரும் நேற்று மஹிந்தவுடன் சந்திப்பு



கொழும்பு, நவ. 02

பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவையும், சபாநாயகர் கரு ஜெயசூரியவையும், பாகிஸ்தான் தூதுவர் கலாநிதி சாஹிட் அகமட் ஹஸ்மட் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புகளின்போது, இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்துப் பேசப்பட்டுள்ளது.

இதன்போது, அரசமைப்புக்கும், ஜனநாயகத்தை வலுப்படுத்தும் செயல்முறைகளுக்கும்பாகிஸ்தான் ஆதரவளிக்கும்என்றுபாகிஸ்தான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள், அமைதியான முறையிலும், இலங்கை மக்கள் மற்றும் அரசமைப்புக்கு அமை யச் சமாளிக்கப்படும் என்றும் அவர்நம்பிக்கைவெளியிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதமராகமஹிந்தநியமிக்கப்பட்ட பின்னர், அவரைச் சந்தித்துள்ள இரண்டாவது வெளிநாட்டுத் தூதுவர் இவராவார்.

முன்னதாக, கடந்தசனிக்கிழமை சீனத் தூதுவர் செங் ஷியுவான், மஹிந்த ராஜபஷவைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.(ஐ)

## மஹிந்தவுடன் சேருமாறு சம்பந்தனிடம் கோருகின்றார் சுப்பிரமணியன் சுவாமி

புதுடில்லி, நவ. 02

இலங்கையில் உள்ள தமிழ் கட்சிகள் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுமாறு பா.ஜ.க.வின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இருவரும் இணைந்து செயற்பட்டால் மாத்திரமே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பதிவில் அவர் தெரிவித்துள்ளவை:- பிரதமர் ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட முயற்சிக்கும்படி, இலங்கைத் தமிழ்ச் சமூகம் மற்றும் அதன் மூத்த மரியாதைக்குரிய தலைவர் சம்பந்தனிடம் நான் வலியுறுத்துகிறேன்.

இதனால் அனைத்தும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும். இந்த முயற்சிக்கு உதவி தேவைப்பட்டால், அதை நான் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்வேன் என்றும் கூறியுள்ளார்.(ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*விட்டது. போலும் !"* – என்று பேச்சுக்கள் அடிபடத் தொடங்கின.

பின்னர், நேற்று மாலை அதற்கு மாறான செய்தி வெளியானது. திங்களன்று நாடாளுமன்றத்தைக் கூட்டும் திட்டம் ஏதும் இல்லை என்று செய்திகள் வெளியானதும் ஸ்ரீமான் பொதுஜனத்தின் பேச்சு வேறு விதமாக இருந்தது.

*"குதிரைப்பேரம் சறுக்கி விட்டது போலும். இப்போதும் கூட சு.க வினர் தரப்புக்கே அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஐ.தே.கவினர் யாரும் வரவில்லை. அதனால் தேவையான எம். பிக்களை மடக்கிப் போட முடியாமல் அரசுத் தரப்பு தடுமாறுகின்றது. அதனால் தான் நாடாளுமன்றத்தை முற்கூட்டியேகூட்டும்திட்டத்தைவாபஸ் பெற்றிருக்கின்றனர்"* – என்று தமது கற்பிதக் கணக்குகளை அள்ளி விடத்தொடங்கினஸ்ரீமான் பொதுஜனத்தின் வட்டாரங்கள்.

உண்மை என்னவென்று ஊடுருவி, தோண்டிப்பார்த்தால், மஹிந்த தரப்பும், மைத்திரி தரப்பும் அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவையான எம்.பிக்களை வளைத்துப் போட்டு விட்டோம் என்ற முழுத் திருப்தியில் – முழு நம்பிக்கையில் – 'எப்பவோ முடிந்த காரியம்' என்ற உறுதியோடு இருக்கின்றன எனத் தெரியவந்தது.

அதேசமயம், புதிய அரசின் முயற்சிகள், நடவடிக்கைகள், செயற்பாடுகளில் மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களான கோட்டாபய ராஜபக்ஷவும், பஸில் ராஜபக்ஷவும் முன்னணிக்கு வராமல், சற்று பின்னணியில் – தங்களை வெளிப்படுத்தாமல் – முற்படுத்தாமல் – செயற்பட்டு வருகின்றமை ஏன் என்பது குறித்து கொழும்பு அரசியல் வட்டாரம் ஒன்று முக்கிய தகவலைத் தெரிவித்தது.

அமெரிக்கா உட்பட பல மேற்குல நாடுகள் தற்போது இடம்பெற்றுள்ள ஆட்சி மாற்றம் சட்டரீதியானது அல்ல, அரசமைப்புக்கு உட்பட்டு நடந்தது அல்ல, அது ஓர் 'அரசியல் சதிப் புரட்சி ' என்ற ரீதியில்தான் இதுவரை கருதி வருகின்றன. இந்த ஆட்சி மாற்றத்தை நேர்மையானஅரசியல்செயற்பாடாக அவை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில், அமெரிக்கப் பிரஜையாக இருக்கும் ஒருவர் பிறிதொரு நாட்டில் அரசியல் சதிப்புரட்சியில் ஈடுபட்டால் கூட, அதற்கு எதிராக அமெரிக்கா தனது விசாரணையை முன்னெடுத்து அந்தப் பிரஜையை சட்டரீதியாகத் தண்டிக்கலாம். அதற்கு அதிகம் வாய்ப்பும் உண்டு.

தற்போதைய ஆட்சிமாற்றத்தை அமெரிக்கா சட்டரீதியானது என ஏற்றுக்கொள்ளும் வரை, அது தொடர்பான நடவடிக்கையில் அமெரிக்கப் பிரஜாவுரிமையை வைத்திருக்கும்கோட்டாபயவும்பஸிலும் சம்பந்தப்படுவது பின்நாளில் அவர்களுக்கு ஆபத்தாகமுடியலாம் எனசிலசட்டவட்டாரங்கள் இருவருக்கும் சுட்டிக்காட்டியுள்ளனவாம். அதனால்தான் புதிய அரசு அமைக்கும்முயற்சியில்வெளிப்படையாகச் செயற்படாமல், பின்னணியில் – தோன்றாத் துணையாயிருந்து – காய்களை நகர்த்தி வருகின்றனராம் இருவரும்.

'சோளியன் குடுமி சும்மா ஆடாது ' பாருங்கோ!. இருவரும் ஆரம்பம் முதலே பம்மிக்கொண்டு நடந்தபோது இப்படி ஏதும் இருக்கும் என்று நினைத்தேன். சரியாகப் போய்விட்டது.

-மின்னல்-

## தொலைபேசி கட்டணங்களின் வரியும் உடனடியாகக் குறைப்பு

கொழும்பு, நவ. 02

தொலைத்தொடர்புசேவைகள் மீது விதிக்கப்பட்டுள்ள 25 சதவீத வரி 15 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது என்று நிதி அமைச்சு அறிவித்துள் ளது.(ஐ)

## சிங்களத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் 'தமிழ் மக்கள் கூட்டணி'யின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

தென்னிலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற அரசியல் நெருக்கடிபற்றியும்தமிழ்கட்சிகள் என்ன செய்ய வேண்டும் என நீங்கள் நினைப்பது பற்றியும்? – என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கனடாபல்கலாசாரவானொலி ( CMR தமிழ் FM ) தரப்பில் இவ்வினா எழுப்பப்பட்டது.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமது அதிகாரத்துக்காகச் சிங்களத் தலைவர்கள் போராடுகின்றார்கள். அதற்கும் எமக்கும் தொடர்பில்லை. நாம் எமது நியாயமான கோரிக்கைகளை முன்வைக்கவேண்டும். அவைஏதாவது ஒரு தரப்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டால் பிற நாட்டு அரசாங்கம் ஒன்றின் முன்னிலையிலேயே அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். சிறைக் கைதிகள், காணாமற் போனோர், பயங்கரவாதத் தடைச் சட்டம், எமது அரசியல் கோரிக்கைகள் என்று பலதையும் அவர்கள் முன்வைத்து இந்த நெருக்கடியான கட்டத்தில் எமது உரிமைகளைப் பெறவேண்டும். ஆனால் இது நடக்குமோ தெரியாது. கொழும்பில் இருந்து ஒரு சிங்கள பத்திரிகையாளர் எனக்குக் கூறியது – தற்போது 15 கோடி (1500 லட்சம்) ரூபா ஒவ்வொருவருக்கும் தருவதாகக் கூறப்பட்டுள்ளதாகவும் தமிழ்ப் பிரதிநிதிகளில் நான்கு பேர் பணம் தருபவர் சார்பாக வாக்களிக்க முன்வந்துள்ளனர் எனவும் செய்தி வந்துள்ளதாக இவ்வாறு நாங்கள் பணம் கொடுத்து வாங்கப்பட்டால் எமது கோரிக்கைகள் எவற்றையும் பெறமுடியாது போய்விடும். தனிப்பட்டவர்கள்நன்மைஅடைவார்கள். தமிழினம் பாதிக்கப்பட்டு விடும். இருந்து பார்ப்போம். – என்றார்

# சட்டம் ஒழுங்கு அமைச்சை தன்வசமாக்கினார் மைத்திரி

கொழும்பு, நவ. 02

புதிய அமைச்சரவையில் பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சுக்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்துள்ளார்.

கடற்படை உள்ளிட்ட முப்படை அதிகாரிகள் மீதான குற்ற விசாரணைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே ஜனாதிபதி சட்டம் ஒழுங்கு அமைச்சை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கூட்டு அரசில் பாதுகாப்பு அமைச்சை தன் வசம் வைத்திருந்த ஜனாதிபதி, புதிய அமைச்சரவையில் பொலிஸ் துறைக்குப் பொறுப்பான சட்டம், ஒழுங்கு அமைச்சையும் தனது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டார்.

இதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மீது உள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் நடவடிக்கைகளை ஜனாதிபதி துரிதப்படுத்துவார் என்று தெரிவிக்கப்படுவதுடன், கடற்படை உள்ளிட்ட முப்படை அதிகாரிகள் மீதான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவார் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# உழைப்பு மீதான வரி குறைப்பு வங்கி வட்டி மீதான வரி நீக்கம்

கொழும்பு, நவ. 02

தொழில்துறையில் உள்ளவர்களின் உழைப்பு மீதான வருமான வரி அறவீடு 24 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது என் நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் பேணப்படும் நிலையான மற்றும் சேமிப்புக் கணக்குகளிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம் மீது விதிக்கப்படும் வரி முற்றுமுழுதாக நீக்கப்படுகிறது என்றும் நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# சகல அரசியல் கைதிகளையும் புதிய அரசு விடுதலை செய்யும்

## நாமல் ராஜபக்ஷ எம்.பி. உறுதி

கொழும்பு. நவ. 02

பிரதமர் மஹிந்த – ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளுக்கும் புனர்வாழ்வளிப்புடன் முன்னாள் போராளிகளுக்கான நிலையான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த உதவி புரியும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள கருத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்தவின் கடந்த அரசால் சுமார் 12 ஆயிரம் முன்னாள் விடுதலைப்புலிகளின் போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டதுடன் 3,000 க்கும் அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் புதிய பிரதமர் மஹிந்த தலைமையிலான புதிய அரசு சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வளிக்கும் வகையில் செயற்படும் எனக் கூறினார்.

மேலும் மீதமுள்ள அரசியல் கைதிகளுக்கும் அவர்களுக்கான நிலையான வாழ்வாதாரங்களைக் கண்டறிந்து இந்த அரசு செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ஐ)

# ரணில் விக்கிரமசிங்க மீது அஸ்கிரிய பீடம் அதிருப்தி

கொழும்பு, நவ. 02

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருக்கு நாட்டைப் பற்றியோ அல்லது மக்களின் பிரச்சினைகள் குறித்தோ எவ்வித உணர்வுகளும் இருக்கவில்லை. எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர்மஹிந்தராஜபக்ஷ ஆகியோரின் இணைவு நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லதாக அமையும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வண. வரகாகொட ஞானரத்ன தெரிவித்தார்.

சுற்றுலா மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் வசந்த சேனாநாயக்க, பிரதி அமைச்சர் ஆனந்த அலுத்கமகே ஆகியோர் நேற்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், அஸ்கிரிய பீடத்துக்கு சமூகமளித்து மகாநாயக்க தேரர் வண. வரகாகொட ஞானரத்னவை சந்தித்து நல்லாசி பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் வாதிகள் எப்போதும் நாட்டு மக்களின் நலனில் அக்கறை காட்டுதல் வேண்டும் என்ற அடிப்படையில் வசந்த சேனாநாயக்காவும், ஆனந்த அலுத்கமகேயும் எடுத்த முடிவு நல்லது எனக் கருதுகின்றேன் என்றும் மகாநாயக்க தேரர் குறிப்பிட்டார்.

சுற்றுலா மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் வசந்த சேனாநாயக்க அங்கு உரையாற்றுகையில் –

ஐ.தே.கவில் சேவை செய்வதற்கான சரியான வாய்ப்பு கிடைக்கவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தற்போதைய பிரதமர் மஹிந்த ஆகிய இருவருடைய தலைமையிலான புதிய அரசில் மக்களுக்கு அதிகமான சேவைகள் செய்யச் சந்தர்ப்பம் கிடைக்கும் என நம்புகின்றேன் என்று கூறினார்.(ஐ)

# இலங்கை அரசியலில் சர்வதேசத் தலையீடா?



## ஆதாரமில்லை என்கிறார் ரணில்

கொழும்பு, நவம்பர் 02

**இலங்கையின் அரசியல் குழப்பநிலைகளின் பின்னணியில் சர்வதேச சக்திகள் உண்டெனக் குறிப்பிடுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மேற்குலகின் நிகழ்ச்சி நிரலின் கீழ் ரணில் செயற்பட்டார் எனவும், அரசியல் சர்ச்சைகளுக்குப் பின்னணியில் மேற்குலகம் காணப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், சர்வதேச ஊடகங்களில் பணியாற்றும் இலங்கை ஊடகவியலாளர்களை நேற்று முன்தினம் புதன்கிழமை அலரி மாளிகையில் சந்தித்த ரணில் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பொது வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் பெயரை சில கட்சிகளும் சிவில் அமைப்புகளும் பரிந்துரைத்தபோதும், மைத்திரியைப் பொதுவேட்பாளராக நிறுத்தினோம்.

கட்சிகளுக்கு இடையே எட்டப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரமே இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது – என்றார். (ஐ)

## அமைச்சுக் கடமையை நேற்று பொறுப்பேற்றார் விஜேதாஸ

கொழும்பு, நவ. 02

புதிய அமைச்சரவையின் கீழ் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட விஜேதாஸ ராஜபக்ஷ தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.



இசுருபாய கல்வியமைச்சில் அவர் நேற்றுக் காலை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜேதாஸ ராஜபக்ஷ, கடந்த வெள்ளிக்கிழமை முதல் பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவைத் தெரிவித்து வந்த நிலையில், அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரதமர் அலுவலக வளாகத்தில் அலைபேசிக்குக் கட்டுப்பாடு

கொழும்பு, நவ. 02

பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பிரதமர் அலுவலகத்தின் ஸ்ரீமதிபாய கட்டடத்துக்குள் உள்நுழையும் வளாகத்தில் அனுமதியின்றி அலைபேசிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு, அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலாளர் எச்.ஏ. சுனில் குணவர்தனவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் தேவையற்ற அலைபேசிப் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகளாலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மேலதிக செயலாளர் எச்.ஏ சுனில் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மிக குறுகிய நாட்களுக்கு மாத்திரமே இந்த விடயம் அமுல்படுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## பொலிஸ்மா அதிபர் வழங்கிய சகல இடமாற்றங்களும் இரத்து

கொழும்பு, நவ. 02

பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இல்லாமல் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவால் பொலிஸ் அதிகாரிகள் 53 பேருக்கு அவசரமாக வழங்கப்பட்ட இடமாற்றங்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக செய்திகள் தெரிவிக்கின்றன.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவால் நேற்றிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், ஒரு மாதத்துக்குத் தற்காலிக அடிப்படையில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. (ஐ)

## வெள்ளத்தில் மூழ்கியது புத்தளம்



கொழும்பு, நவ. 02

நாடளாவிய ரீதியில் மழையுடன் கூடிய காலநிலை நீடித்து வருகின்ற நிலையில், புத்தளம் பகுதியில் பல வீடுகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளப் பாதிப்பினால் மதுரங்குளி – ஸ்ரீமேவாபுரம் கிராமத்தில் 12 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறாக மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் பட்சத்தில் முழு கிராமமும் வெள்ள நீரில் மூழ்கும் அபாயம் காணப்படுவதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக பல நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தப்போவ நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகளும், இராஜங்கனை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன எனவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)

## தொடர்ந்து வீழும் ரூபா



கொழும்பு, நவ. 02

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சி கண்டு வருகிறது. நேற்று இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணயமாற்று விகிதத்தின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனைப் பெறுமதி, 177.32 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னரும், இலங்கை நாணயத்தின் மதிப்பு வீழ்ச்சியடைவது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த புதன்கிழமை 174.75 ரூபாவாக இருந்த அமெரிக்க டொலர் ஒன்றின் மதிப்பு, நேற்று முன் தினம் 176.25 ரூபாவாக வீழ்ச்சி கண்டது. நேற்று 177.32 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது. (ஐ)

## கூட்டு ஒப்பந்த பேச்சிலிருந்து தொண்டமான் வெளிநடப்பு

கொழும்பு, நவ. 02

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் அவர்களுக்கான சலுகைகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் கூட்டு ஒப்பந்தப் பேச்சிலிருந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் வெளிநடப்புச் செய்துள்ளார்.

கூட்டு ஒப்பந்தத்தை மீறி முதலாளிமார் சம்மேளனம் செயற்படுவதாக குறிப்பிட்ட அவர், அதிலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்ற கூட்டு ஒப்பந்தம் தொடர்பான 3ஆம் கட்ட பேச்சின் பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

புதிய அரசு 1000 ரூபா சம்பளத்தை வழங்கியே ஆகவேண்டுமென குறிப்பிட்ட ஆறுமுகன் தொண்டமான், இல்லாவிட்டால் அமைச்சுப் பதவியைத் துறப்பேன் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

1000 ரூபா அடிப்படைச் சம்பளம் கோரி பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில், நேற்றைய பேச்சும் தோல்வியில் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மைத்திரி எதிர் ரணில் - பலப்பரீட்சை

எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தம்மால் ஒத்திவைக்கப்பட்ட – முடக்கப்பட்ட – நாடாளுமன்றத்தை அத்திகதிக்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்டுவார் என்று நேற்றுக் காலை வெளியான செய்தி பொய்த்துப் போய்விட்டது.

நேற்றுக் காலை பிரதமர் அலுவலகத்தில் பல்கலைக் கழக விரிவுரையாளர்களைச் சந்தித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே நாடாளுமன்றம் முற்கூட்டியே கூட்டப்படும் என்ற தகவலைக் கூறியிருந்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை – 5 ஆம் திகதி – நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்து வருகின்றார் எனத் தமக்கு ஜனாதிபதியால் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாக மஹிந்த ராஜபக்ஷ அப்போது கூறியிருந்தார்.

அதனால், தம்மால் முடக்கப்பட்ட நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கூட்டும் முடிவுக்கு ஜனாதிபதி வந்துவிட்டார் என்ற செய்தி பரவியது.

ஆனால், மாலையில் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அப்படி முற்கூட்டியே நாடாளுமன்றைக் கூட்டும் முடிவு எதையும் ஜனாதிபதி எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தைக் கூட்டும் விடயத்திலேயே ஜனாதிபதிக்கும், அவரது புதிய பிரதமருக்கும் இடையிலான ஊடாட்ட நெருக்கம் – தொடர்பாடல் சிறப்பு – எத்தகைய நிலையில் உள்ளது என்பது அம்பலமாகி நிற்கின்றது.

அதேசமயம், ஏற்கனவே கொழும்பில் பெரும் மக்கள் கூட்டத்தைக் கூட்டி ஐ.தே.க.கட்சியும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளிப்படுத்திய ஆதரவுக் தளத்துக்குப் போட்டியாக, திங்களன்று பெரும் கூட்டத்தைத் தாமும் திரட்டிக் காட்ட ஜனாதிபதியும் அவரது புதிய பிரதமரும் அவர்களது தரப்பினரும் திட்டமிடப்பட்டிருக்கின்றனர்.

அப்படியாயின், திங்களன்று முன்னர் ஆவலோடு எதிர்பார்க்கப்பட்டபடி நாடாளுமன்றம் கூடாது. பதிலாக ஆளும் தரப்பின் மக்களைவை கூட்டத் திருவிழாவே அரங்கேறும்.

நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாக கடுமையான சர்வதேச அழுத்தத்துக்கு உள்ளாகி வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த விடயத்தில் எப்படியாயினும் – ஏதோ ஒரு கட்டத்தில் – அதற்குக் கீழ்படிந்தேயாக வேண்டிய சூழல் வரும் என்றே தோன்றுகின்றது.

ஆனால், சர்வதேசத் தரப்புகள் குறித்து இப்போது அவர் கூறும் சில கருத்துக்கள் இன்னும் வேடிக்கையானவையாகவும், சிறுபிள்ளைத்தனமானவையாகவும் இருக்கின்றமை சுட்டிக்காட்டப்படத்தக்கதாகும்.

*"ரணிலை மீண்டும் பிரதமராக்கக் களமிறங்கியுள்ளது மேற்குலகம். அவரை மீண்டும் பிரதமராகக் கொண்டு வரும் சதி முயற்சியிலும் அது ஈடுபட்டுள்ளது."* – என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி.

அவரது இந்தக் கருத்தை ஒட்டி இரு கேள்விகள் எமக்கு எழுகின்றன.

ஒன்று – பதவியில் இருந்த பிரதமரை அவருக்குத் தெரியாமலேயே – அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் – சட்டத்துக்கு மாறான முறையில் – வீட்டுக்கு அனுப்பிவிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான அட்சரகணிதக் கணக்கில் அறுதிப் பெரும்பான்மை பெறாத ஒருவரைப் பின்கதவால் நியமித்த நடவடிக்கை அரசியல் சதியா, அல்லது ஜனநாயக முறைமைக்கு அமைய – நாட்டின் அரசமைப்பு மற்றும் சட்ட திட்டங்களுக்கு அமைவாகப் பிரதமர் பதவி வகிப்பவரை – வகித்தவரை – அந்தப் பதவியில் தொடரச் செய்வதற்கு முயற்சிப்பது சதி முயற்சியா?

அடுத்தது – இன்று ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் தொடரச் செய்வதற்கு மேற்குலகம் எடுக்கும் அழுத்த நடவடிக்கை – அல்லது முயற்சி – சதி நடவடிக்கை என்றால், 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில், இன்று மைத்திரிபால சிறிசேன 'உத்தம தலைவர்' என்று மதித்துக் கொண்டாடும் மஹிந்த ராஜபக்ஷவை அப்போது தோற்கடித்து, மைத்திரிபால சிறிசேனவை இன்று அவர் இருக்கும் ஜனாதிபதி ஆசனத்துக்குக் கொண்டு வருவதற்கு மேற்குலகம் பட்டபாடு சதி நடவடிக்கை இல்லையா?

மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி மைத்திரிபால சிறிசேனவைக் கொண்டு வருவதற்கு மேற்குலம் எடுத்த தீவிர முயற்சி நியாயமானது என்றால் –

இன்று ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் தக்க வைப்பதற்கு மேற்குலம் முன்னெடுக்கும் முயற்சிகளும் கொழும்புக்கு வழங்கும் அழுத்தங்களும் கூட நியாயமானவைதான். அவை அரசியல் சதி முயற்சி நடவடிக்கைகளே அல்ல.

விரைவில் நடாளுமன்றத்தில் நடக்கப்போகும் பலப்பரீட்சை நேரடியாக மஹிந்த தரப்புக்கும், ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கும் இடையிலானது என்றாலும் கூட , மீண்டும் ரணில் பிரதமராகும் வாய்ப்பு ஏற்பட்டால் அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் ஜனாதிபதி பதவியைத் துறந்துவிட்டு மக்களுடன் போராடப் போய்விடுவேன் என்று பகிரங்கமாக அறிவித்ததன் மூலம் இந்த நடாளுமன்றச் சமரை நேரடியாகத் தமக்குரியதாக மாற்றியிருக்கின்றார் மைத்திரிபால.

ஆகவே விரைவில் நாடாளுமன்றுக்கு உள்ளேயும் வெளியேயும் நடக்கப்போகும் அரசியல் போராட்டங்கள் மஹிந்தர் எதிர் ரணில் ஆக அமையாது. மைத்திரி எதிர் ரணில் என்பதாகவே அமையும்.

# உடவளவைக் காட்டுக்குள் அதிகாலை துப்பாக்கிச் சூடு

## ஒருவர் படுகாயம்

உடவளவ காட்டில் நேற்று முன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

உடவளவ காட்டில் மிருக வேட்டையில் ஈடுபட்ட இருவரைப் பொலிஸ் விசேட படையணியினர் கைது செய்யச் சென்றபோது, சந்தேகநபர்களுக்கும் பொலிஸ் விசேடபடையணிக்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிப் பிரயோகத்திலேயே சந்தேக நபரொருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சந்தேக நபர் உடவளவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக காலி கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், இவர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி, ரவைகள் 27 , மான் இறைச்சி மற்றும் கொல்லப்பட்ட மான்கள் என்பவற்றைப் பொலிஸ் விசேட படையணியினர் கைப்பற்றியுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# மீன்பிடியை 2 நாள் தவிர்க்குமாறு மன்னார் மீனவருக்கு எச்சரிக்கை!

மன்னார், நவ. 01

இன்றும் நாளையும் மன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு மீனவர்களிடம் மன்னார் கடற்தொழில் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மன்னார் கடற்பிராந்தியத்தில் எண்ணெய் வள ஆய்வு மேற்கொள்ளப்பட இருக்கின்ற நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இலங்கையின் பல்வேறு கடற்பிரதேசங்களில் எண்ணெய் வள ஆய்வுகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. கடந்த 26ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆய்வுப் பணிகள் எதிர்வரும் 4ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளன.

குறிப்பாக காலி, களுத்துறை, கொழும்பு, நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் மற்றும் மன்னார் ஆகிய கரையோர கடற்பரப்பில் இவ் எண்ணெய் வள ஆய்வு நடைபெற்று வருகின்றது.

இந்த எண்ணெய் வள ஆய்வுக்காக நான்கு கப்பல்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்காலப்பகுதியில் குறிப்பிடப்பட்ட கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடும் பட்சத்தில் இவர்களின் மீன்பிடி உபகரணங்களுக்குச் சேதம் ஏற்படும் வாய்ப்புக்கள் இருப்பதாகவும், எனவே பாதுகாப்பு கருதி மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மீனவர்கள் மன்னார் வடக்கு, தெற்கு கடற்பிராந்தியத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் நாளை சனிக்கிழமை காலை 8 மணி வரை கரையிலிருந்து ஐந்து கடல் மைல் தூரத்துக்கு அப்பால் முற்றாக மீன்பிடியில் ஈடுபடவேண்டாம் என கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பழிவாங்கும் அரசியல் மலையகத்தில் நடக்காது

## இணைந்து பணியாற்ற தொண்டா அழைப்பு



கொழும்பு, நவ. 02

கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட தவறுகளைத் திருத்திக் கொண்டு, மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என்று அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

பழிவாங்கும் அரசியலை நான் முன்னெடுக்கவில்லை. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையே தற்போது நிவர்த்தி செய்துவருகின்றேன் என்று அவர் கூறினார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், அமைச்சுப் பதவியை பொறுப்பேற்ற கையோடு மலையகத்தில் பழிவாங்கும் அரசியலை தொண்டமானும், அவரது சகாக்களும் முன்னெடுத்துவருகின்றனர் என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது குறித்தும், இ.தொ.காவின் அரசியல் எதிர்காலம் தொடர்பிலும் வினவிய போதே தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

மக்கள் எமக்கு வழங்கிய ஆணையை ஒருபோதும் மீறவில்லை. மக்களுக்காகவே அமைச்சுப் பதவியை ஏற்றுள்ளேன். எமது மக்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுத் தருவதாக புதிய பிரதமர் உறுதியளித்துள்ளார். இதன் காரணமாகவே எம்.பி.பதவியைத் துறக்கும் முடிவை ஒத்தி வைத்தேன்.

மக்கள் எம் பக்கமே நிற்கின்றனர் என்பதைக் கடந்த உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் எமக்கு உணர்த்தின. எனவே, எம்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை ஒருபோதும் தவிடுபொடியாக்கும் வகையில் செயற்படமாட்டோம். மக்களுக்கான அரசியலையே நடத்தி வந்தோம். இனியும் நடத்துவோம்.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் இ.தொ.காவினர் பழிவாங்கப்பட்டனர். எமது ஸ்தாபகத் தலைவரைக்கூட விட்டுவைக்கவில்லை. அவ்வாறு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குதான் நிவாரணம் வழங்கி வருகின்றேன். இது பழிவாங்கல் நடவடிக்கை அல்ல. அதேபோல், மக்களுக்காக முக்கிய திட்டங்கள் வரும்போது இணைந்து பணியாற்ற அனைவரும் முன்வர வேண்டும். அதற்கு வடிவேல் சுரேஷ் சிறந்த முன்னுதாரணத்தை வழங்கியுள்ளார்– என்றார். (ஐ)

## வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."


*-வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)*

## நாளை

03.11.2018
சனிக்கிழமை
நட்சத்திரம்: பூரம் பி.இ. 11.13 வரை
திதி : ஏகாதசி பி.இ. 3.11 வரை
சுபநேரம் : 3.04 – 4.34 வரை
இராகுகாலம் : 9.04 – 10.34 வரை

# புதிய அரசமைப்பு வரைவை தீயிட்டு கொளுத்தவேண்டும்

## எல்லே குணவன்ச தேரர் சீற்றம்



கொழும்பு, நவ. 02

முன்னைய அரசால் தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்பு வரைவை, மைத்திரி – மஹிந்த அரசு தீயிட்டுக் கொளுத்தவேண்டும் என்று எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் –

'அரசமைப்பு வரைவு மற்றும் தேசிய சொத்துக்களின் விற்பனை ஆகியன விக்கிரமசிங்க நிர்வாகத்தால் செய்யப்பட்ட மிகப்பெரிய குற்றங்களாகும்.

மேற்கத்தேய நாடுகளின் உத்தரவுக்கமைய எழுதப்பட்ட அந்த அரசமைப்பு நிறைவேற்றப்பட்டால், நாடு பிளவுபடும். வெளிநாட்டுச் சக்திகள் எமது இயற்கை வளங்களைச் சுரண்டிக் கொள்ள முடியும்.

இலங்கையில் தமது நிகழ்ச்சி நிரலை இனிச் செயற்படுத்த முடியாது என்று கவலைகொண்டுள்ள அனைத்துலகச் சமூகம், குறிப்பாக மேற்குலக நாடுகள், உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்ய எத்தனிக்கின்றன.

மேற்கத்தேய நாடுகளின் தலையீடுகள் பரந்தளவில் உள்ளன. நாங்கள் ஜனாதிபதியை, சபாநாயகரைத் தெரிவு செய்தது எமக்காகவா அல்லது அவர்களுக்காகவா என்ற வியப்பு ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் தமது கவலையை வெளியிட்டுள்ளன.

தமது இலங்கை நிகழ்ச்சி நிரல் முடிவுக்கு வந்துவிட்டது என்று அவர்கள் கவலைப்படுகின்றனர்.

வெளிநாடுகள், இலங்கையின் இறைமையை மதிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்ய வெளிநாடுகளுக்கு இலங்கைத் தலைவர்கள் இடமளிக்கக் கூடாது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் போன்ற விற்கப்பட்ட எமது சொத்துக்களைப் புதிய அரசு, மீளப்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட குணதாச அமரசேகர, சீனத் தூதுவர் மாத்திரமே முறைப்படி செயற்பட்டார் என்றும் பாராட்டினார். (ஐ)

# ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னால் இருந்தவர் விஜயதாஸ ராஜபக்ஷ

## விக்ரமபாகு கருணாரத்ன குற்றச்சாட்டு



கொழும்பு, நவ 02

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அரசமைப்பிற்கு முரணான வகையில் செயற்படுகின்றனர் என்றும், இந்த அரசியல் சதிக்கான சட்ட ஆலோசகராக அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவே செயற்பட்டுள்ளாரெனவும், நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்ரமபாகு கருணாரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சட்டத்தில் காணப்படும் விடயங்களைத் தமக்கு ஏற்ற வகையில் கையாளும் விதத்தில் விஜேதாஸ ராஜபக்ஷ வல்லவர். தற்போதைய அரசியல் செயற்பாடுகளால் நாடு பாரதூரமான விளைவுகளை சந்திக்கும். ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்ப நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கியமைக்கு எதிராக பாரிய போராட்டத்தை முன்னெடுப்போம் – என்றார். (ஐ)

# சார்க் நாடுகளிடம் ஒத்துழைப்பு கோருகின்றார் சரத் அமுனுகம

புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட கலாநிதி சரத் அமுனுகம நேற்று முன்தினம் சார்க் நாடுகளின் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரங்களை எடுத்துக் கூறியுள்ள சரத் அமுனுகம, புதிய அரசுக்குச் சார்க் நாடுகள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் இருதரப்பு மற்றும் பரஸ்பர உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பாகவும், கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், மாலைதீவு ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டை பொலிஸாரே ஊக்குவிக்கின்றனர்

## பெண் சட்டத்தரணி மன்றில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு வன்முறைகளைப் பொலிஸாரே ஊக்குவிக்கின்றனர். சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்து தாங்களே வாள் ஒன்றை வைத்துவிட்டு அவரிடம் மீட்டதாக நீதிமன்றில் முற்படுத்துகின்றனர்

– இவ்வாறு யாழ். நீதிவான் நீதிமன்றில் எடுத்துத்துரைத்தார் சட்டத்தரணி மேனகா ஜீவதர்ஷன்.

யாழ்ப்பாணம் – கொக்குவில் தொடருந்து நிலையத்துக்கு அருகில் ஓட்டோவில் ஆபத்தான சிறியரக வாள் ஒன்றை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாயைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞன் கோப்பாய் பொலிஸாரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

ஓட்டோச் சாரதியான சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரிடம் மீட்டதாகச் சிறிய ரக வாள் ஒன்றைப் பொலிஸார் மன்றில் சான்றுப் பொருளாகச் சமர்ப்பித்தனர்.

சந்தேகநபர் சார்பில் பெண் சட்டத்தரணி மேனகா ஜீவதர்ஷன் முன்னிலையானார்.

சந்தேகநபர் தனது ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திய 2 ஆண்கள், ஒரு பெண்ணை ரயில் நிலையத்தில் இறக்கிவிடச் சென்றார். அவரது ஓட்டோவில் பயணித்தவர்கள் ரயில் நிலையத்துக்கு அண்மையாக நின்ற பொலிஸாரைக் கண்டதும் ஓட்டம் எடுத்தனர்.

அவர்களில் ஆண்கள் இருவரையும் கைது செய்த பொலிஸார், ஓட்டோச் சாரதியான இந்தச் சந்தேகநபரையும் கைது செய்தனர். அவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து வாள் ஒன்றை அவரிடம் மீட்டதாக வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைகளைப் பொலிஸாரே ஊக்குவிக்கின்றனர் என்று சட்டத்தரணி மேனகா ஜீவதர்ஷன் மன்றில் சமர்ப்பணம் செய்து சந்தேகநபர் சார்பில் பிணை விண்ணப்பம் செய்தார்.

சந்தேகநபரிடமிருந்து கைபேசி ஒன்று கைப்பற்றப்பட்டது. அதில் அவர் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையில் வீதிச் சுற்றுக்காவலில் ஈடுபடும் இடங்களின் ஒளிப்படங்கள் இருந்தன.

சந்தேகநபர், மானிப்பாய் பகுதியில் எடுத்த அந்தப் படங்களை, வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு அனுப்பிப் பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் சோதனையில் ஈடுபடும் இடங்கள் தொடர்பில் அவர்களுக்குத் தகவல் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

இருதரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், சந்தேகநபரை எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, சந்தேக நபரால் ஓட்டோவில் ஏற்றிவந்து இறக்கிய இருவர், விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் மன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் மன்றுக்கு அறிவித்தனர். (ஐ)

# கதிர்காமர் கொலை வழக்கு எதிரி 13 வருடங்களின் பின்னர் விடுதலை



கொழும்பு, நவ. 02

லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசாவின் வாதத்தையடுத்து இரண்டாம் எதிரியான இசிதோர் ஆரோக்கியநாதன் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் கெட்டியாராச்சியால் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான் அல்லது சிவசங்கர், வினோதன் அல்லது சாள்ஸ் மாஸ்டர், கோமதிமதி மேகலா ஆகியோருடன் இணைந்து சதி செய்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலை செய்தமைக்கு உடந்தையாகச் செயற்பட்டார் என சகாதேவன், ஆரோக்கியநாதன் ஆகிய இருவருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஐந்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு 2008 ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது;

இரண்டாம் எதிரியான இசிதோர் ஆரோக்கியநாதனுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது அரச தரப்பில் 15 பேர் சாட்சியமளித்தனர்.

மேலும் அரச தரப்பில் இரண்டாம் எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நீதிமன்றினால் உண்மை விளம்பல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அந்த வாக்கு மூலம் சுயமாக வழங்கப்படவில்லை, எனவே அதனை அரச சான்றாக எடுத்துக் ஏற்றுக்கொள்ள முடியாதென மேல் நீதிமன்றம் கடந்த ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி நிராகரித்த நிலையில் இந்த வழக்கு நேற்று மேலதிக விசாரணைக்கு வந்தது.

எதிரியின் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா தனது வாதத்தில், இந்த வழக்கில் அரச தரப்பில் காலஞ் சென்ற முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த படையினரும் பொலிஸ் உத்தியோகத்தவர்களும் அரச தரப்பில் சாட்சியமளித்திருந்தனர் ஆனால் அவர்களுடைய சாட்சியங்களில் இரண்டாம் எதிரிக்கெதிராக எந்தவித சான்றுகளும் முன்வைக்கப் படாதமை மட்டுமன்றி இந்த சாட்சியங்களில் உள்ள பல முரண்பாடுகளையும் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.

அவர் தனது வாதத்தில், இந்தக் கொலைச் சம்பவம் அதியுச்ச பாதுகாப்பு வலயத்தில் நடந்தபோதிலும் நேரடியான கண் கண்ட சாட்சியங்களோ சூழ்நிலைச் சான்றுகளோ அரச தரப்பினால் இந்த வழக்கில் முன்வைக்கப்படவில்லை என்பதுடன் அரச தரப்பால் முக்கிய சான்றாக முன்வைக்கப்பட்ட ஒரே சான்றான குற்றஒப்புதல் வாக்கு மூலமும் இந் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட நிலையில் இரண்டாம் எதிரியை விடுதலை செய்யுமாறு கோரினார்.

இரு தரப்பினரதும் வாதப்பிரதிவாதங்களை யடுத்து கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசாவின் சட்டவாதத்தை ஏற்று இரண்டாம் எதிரி ஆரோக்கியநாதனை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி மொகமட் நவாவி ஆஜரானதுடன் இரண்டாம் எதிரியின் சார்பில் சட்டத்தரணி செல்வி தர்மஜா தர்மராஜாவின் அனுசரனையில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா ஆஜரானார். (ஐ)

# பொதுத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிராக 'மெகா' கூட்டணி அமைக்கத் தீவிர முயற்சி





புதுடில்லி, நவ.02

அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் பா.ஜ.கவுக்கு மாற்றாக தேசிய அளவில் மெகா கூட்டணியை உருவாக்க முயன்று வரும் ஆந்திர முதல்வரும் தெலுங்குதேசம் கட்சி தலைவருமான சந்திரபாபு நாயுடு, டெல்லியில் நேற்று தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் மற்றும் தேசிய மாநாட்டுக்கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா ஆகியோரைச் சந்தித்து பேசினார்.

தெலுங்கானா மாநிலத்தில் டிசம்பரில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் ஆளும் தெலுங்கானா ராஷ்டிர சமதியை வீழ்த்த காங்கிரஸுடன் தெலுங்குதேசம் கரம் கோர்க்க உள்ளது. இதுதொடர்பாக டெல்லியில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியை, ஆந்திர முதல் வர் சந்திரபாபு நாயுடு நேற்று மாலை சந்தித்துப் பேசினார்.

அப்போது தேசிய அளவில் பா.ஜ.க.அல்லாத மெகா கூட்டணியை உருவாக்குவது பற்றியும், அதில் பிற கட்சிகளை இணைப்பது பற்றியும் விரிவாக பேசப்பட்டதாகத் தெரிகிறது.

முன்னதாக பா.ஜ.கவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்ட அரசியல் கட்சித் தலைவர்களான, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா ஆகியோரை சந்திரபாபு நாயுடு சந்தித்து ஆலோசனை நடத்தினார். மேலும் காங்கிரஸ் மூத்த தலைவர் குலாம்நபி ஆசாத்தையும் சந்தித்தார்.

பின்னர் இதுகுறித்து சந்திரபாபு நாயுடு கூறுகையில் "பா.ஜ.கவை வீழ்த்த அனைத்து கட்சிகளும் ஒன்றிணைவது அவசியம்" என்றார்.

இதுபோலவே சரத் பவார் கூறுகையில் "சிபிஐ தொடங்கி ரிசர்வ் வங்கி வரை இந்த ஆட்சியில் சந்தித்து வரும் அவலங்களை நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த அவலநிலை தீர பா.ஜ.கவுக்கு எதிராக அனைத்து கட்சிகளும் கரம் கோர்க்க வேண்டும்" என்றார்.

முன்னதாக சில தினங்களுக்கு முன்பு டெல்லி வந்த சந்திரபாபு நாயுடு, பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதி, ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கேஜ்ரிவால், திரிணமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி உள்ளிட்டோரை சந்தித்து பேசினார். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க. கூட்டணியில் இணைந்து போட்டியிட்ட சந்திரபாபு நாயுடு சில மாதங்களுக்கு முன்பு அந்த கூட்டணியில் இருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

பா.ஜ.க.வைத் தோற்கடிப்பதற்காக சந்திரபாபு நாயுடுவுடன் ஒன்றிணைவதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பதில் ஈடுபாடு காட்டி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக ஆந்திர முதல்வரும், தெலுங்கு தேசம் கட்சித் தலைவருமான சந்திரபாபு நாயுடு, நேற்று (வியாழக்கிழமை) டெல்லியில் காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தியைச் சந்தித்தார்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உடனான சந்திப்புக்குப் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்தச் சந்திப்பு சிறப்பான ஒன்றாக அமைந்தது. ஜனநாயகத்தைக் காக்கவும், இந்தியாவின் பெருமை மிகு நிறுவனங்களின் மாண்புகளைக் காக்கவும் இந்தியாவின் வளமான எதிர்காலத்திற்காக ஒருங்கிணைந்து செயல்படுவது என்று முடிவெடுத்துள்ளோம்.

"எங்களது பேச்சில் நாங்கள் நிகழ் காலத்தையும், எதிர்காலத்தையும் மட்டும் குறித்துப் பேசினோம். பா.ஜ.க.வைத் தோற்கடிப்பதையும், ஜனநாயகத்தை பாதுகாப்பதையும் எங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

"பத்திரிகையாளர்களான உங்களுக்கு வேண்டுமானால் பரபரப்பு செய்திகள் தேவைப்படலாம். ஆனால் எங்கள்முன் உள்ள சவால்களைச் சந்தித்து வெற்றி காண்பதையே நாங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளோம்" – என ராகுல் தெரிவித்தார்.

## ரஜனியின் படத்தில் நடிக்கக் கமல் மறுப்பு



ஷங்கர் இயக்கத்தில் உருவாகியிருக்கும் 2.0 படத்தில் அக்ஷய் குமார் நடித்துள்ள வேடத்தில் நடிக்க கமலிடம் பேச்சு நடத்தப்பட்ட நிலையில், அவர் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார் என ஷங்கர் கூறியுள்ளார்.

ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிப்பில் பெரும் பொருள்செலவில் உருவாகி இருக்கும் படம் 2.0.

எந்திரன் படத்தின் தொடர்ச்சியாக உருவாகி இருக்கும் இந்த படத்தை பற்றிய முக்கிய விடயங்களை இயக்குனர் ஷங்கர் பகிர்ந்துள்ளார்.

2.0 படத்தின் வில்லன் வேடம் மிக முக்கியமானது. எனவே, இதில் நடிக்க வைக்க முதலில் ஹொலிவுட் நடிகர் ஆர்னோல்டை அணுகி இருக்கிறார்கள். ஆர்னோல்டும் ஆர்வமாக இருந்து இருக்கிறார். ஆனால் ஹொலிவுட் நடிகருக்கும், இந்திய சினிமாவுக்குமான ஒப்பந்தங்களில் சில சிக்கல்கள் இருந்தமையால் அது நிறைவேறாமல் போயிருக்கிறது.

அடுத்து ரஜினிக்கு வில்லனாக நடிக்க கமலை அணுகி இருக்கிறார்கள். அவர் ஷங்கரிடம் 'இந்தியன் 2' நடிப்பதில் தான் தனக்கு ஆர்வம் இருப்பதாக சொல்லிவிடவே அக்ஷய் குமாரிடம் சென்று இருக்கிறார்கள். இந்த வேடம் ரஜினியுடன் மோதினாலும் வில்லன் வேடமாக இருக்காது. அவரது மோதலிலும் ஒரு நியாயம் இருக்கும். – என்கிறார்.

## சிதம்பரத்தைக் கைது செய்யும் நடவடிக்கைக்குத் தடை நீடிப்பு

முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் மற்றும் அவரது மகன் கார்த்தி சிதம்பரம் ஆகியோரைக் கைது செய்ய விதிக்கப்பட்ட தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஏயார்செல் – மேக்சிஸ் முறைகேடு தொடர்பில் அமுலாக்கத் துறை பதிவு செய்த வழக்கில் இந்த இருவரையும் கைதுசெய்வதற்கான இடைக்காலத் தடை உத்தரவையே பட்டியாலா நீதிமன்றம் மேலும் நீடித்து நேற்று (வியாழக்கிழமை) உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் 26 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. கடந்த 2006 ஆம் ஆண்டில் மத்திய நிதியமைச்சராக ப.சிதம்பரம் பதவி வகித்தபோது மலேசியாவைச் சேர்ந்த மேக்சிஸ் நிறுவன, ஏயார்செல் நிறுவனத்தில் ரூ.3,500 கோடிக்கு முதலீடு செய்தது.

இந்த முதலீடு, பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவின் அனுமதி பெறாமல் மேற்கொள்ளப்பட்டதாகவும், இதற்கு கார்த்தி சிதம்பரம் உதவினார் எனவும், அதற்குப் பிரதிபலனாக அவரது நிறுவனங்களுக்கு லஞ்சப் பணம் கைமாறியதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இதுதொடர்பாக, கறுப்புப் பண தடுப்புச் சட்டத்தின்கீழ் அமுலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறது.

இவ்வழக்கில் கார்த்தி சிதம்பரம் மற்றும் அவருக்குச் சொந்தமானதாகக் கருதப்படும் இரு நிறுவனங்களின் ரூ.1.16 கோடி மதிப்பிலான சொத்துகளை அமுலாக்கத் துறையினர் கடந்த ஆண்டில் முடக்கினர்.

இதனிடையே, இவ்வழக்கில் கார்த்தி சிதம்பரத்துக்கு எதிராக அமுலாக்கத் துறை கடந்த ஜுன் 13 இல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது.

இந்த வழக்கு டெல்லி சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக் கப்பட்டுவருகின்றது. இதனிடையே ப.சிதம்பரம் மற்றும் அவரது மகனை கைது செய்வதற்கு இடைகால தடையை நீதிமன்றம் விதித்தது.

இத்தடை நேற்றுடன் முடிவடைந்த நிலையில் எதிர் வரும் 26 ஆம் திகதி வரை நீட்டித்து உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு கஷ்மீர் எல்லையில் சூட்டுக்கு இருவர் உயிரிழப்பு

ஜம்மு – காஷ்மீர் மாநிலம் புட்காம் அருகே இந்தியப் பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



தேசிய எல்லைக் கோட்டுப் பகுதியில் அத்துமீறி நுழைய முயன்ற இருவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புட்காம் மாவட்டம், ஜாகூ பகுதியில் உள்ள கான்சாகீப் என்ற இடத்தில் பயங்கரவாதிகள் பதுங்கி இருக்கின்றனர் எனப் பாதுகாப்பு படையினருக்கு உளவுத்துறை மூலம் ரகசிய தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு படையினர் அப்பகுதியை முற்றுகையிட்ட போது பயங்கரவாதிகள் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் படையினர் பதில் தாக்குதலை நடத்தினர்.

மேலும் இரு பயங்கரவாதிகள் பதுங்கியிருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளதால் பாதுகாப்புப் படையினர் அப்பகுதியில் தேடுதலை மேற்கொண்டுவருகின்றனர்.

# காந்தியின் சிலையை அமைக்க மலாவி நாட்டில் தடை உத்தரவு

இன வசைச் சொற்களை காந்தி பயன்படுத்தினார் என்று தெரிவித்து கிழக்கு ஆபிரிக்க நாடான மலாவி நாட்டு நீதிமன்றம் இந்தியாவின் தேசத் தந்தையான மோகன்தாஸ் காந்தி சிலை கட்டுமானப் பணிகளுக்குத் தடை விதித்துள்ளது.

அவர் ஆபிரிக்க நாட்டினரைக் காட்டுமிராண்டிகள் என்று குறிப்பிட்டுள்ளார் என்று தெரிவித்து காந்தி சிலைக்குத் தடை விதிக்கும்படி சில பேராசிரியர்கள் கோரினர்.

காந்தியின் கருத்துகள் கறுப்பினத்தவரான தங்களுக்கு வெறுப்பை ஏற்படுத்துவனவாக இருந்தன எனக் குறிப்பிட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர் 'காந்தி வீழ வேண்டும்' அமைப்பினர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி மிக்கேல் டெம்போ சிலை கட்டுமானப் பணிகளுக்கு இடை காலத் தடை விதித்துள்ளார்.

இந்தியாவுடன் செய்துக் கொண்ட 10 மில்லியன் டொலர் ஒப்பந்தத்தின் பகுதியாக இந்தச் சிலையின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் மலாவியின் வணிகத் தலைநகரமாகப் பார்க்கப்படும் ப்ளாண்டைரில் காந்தியின் பெயரில் மண்டபமும் கட்டப்படுகிறது.

இந்திய உப ஜனாதிபதி வெங்கையா நாயுடு மலாவி சென்று சிலை திறப்பு விழாவில் கலந்துகொள்ள திட்டமிட்டிருந்தார் என்கிறது அந்நாட்டு இதழான தி நேஷன்.

நீதிமன்றம் அடுத்த உத்தரவு பிறப்பிக்கும் வரை கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என்று தமது தீர்ப்பில் அந்நாட்டு உயர்நீதி மன்றம் குறிப்பிட்டுள்ளது.


காந்தி இந்தியாவின் தந்தையாக, கதாநாயகனாக கொண்டாடப்படுகிறார். ஆனால் அவரது ஆப்பிரிக்க நாள்கள் அதிக சச்சரவுக்குள்ளாகின்றன.

காந்தி தங்கள் நாட்டுக்கு எதுவும் செய்யவில்லை என்று கூறி 3000 மலாவி மக்கள் கையொப்பமிட்டு மனு ஒன்றை அளித்துள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் கானா பல்கலைக்கழக பேராசிரியர்கள் காந்தி சிலையை தங்கள் வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்று கோரி இருந்தனர். காந்தி மேற்கொண்ட அகிம்சைப் போராட்டத்தில் 'இன அடையாளம்' இருந்ததாக அவர்கள் கூறினர்.

இதற்கு காந்தியின் எழுத்திலிருந்தே சான்று காட்டினர். காந்தி ஆப்ரிக்கர்களை காட்டுமிராண்டிகள் என்று குறிப்பிட்டு எழுதி இருந்தார் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தென் ஆப்ரிக்காவில் 2015 ஆம் ஆண்டு காந்தியின் சிலையை ஒருவர் சேதப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.





## தொடர்ந்து செல்போன் பாவித்ததால் வந்த அவதி



ஒரு வாரம் தொடர்ந்து செல்போன் உபயோகித்ததால் விரல்களை அசைக்க முடியாமல் அவதியுறும் நிலைக்கு உள்ளானார் ஒரு பெண்.

சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவர், அலுவலக வேலை காரணமாக, இரவு தூங்கிய நேரம் தவிர பிற நேரங்களில் எல்லாம் தொடர்ந்து ஒரு வாரம் செல்போன் பயன்படுத்தியுள்ளார். பின்னர், பணி முடிந்து விடுப்பு எடுத்து வீட்டிற்கு திரும்பியுள்ளார். வீட்டிற்கு சென்று சில மணி நேரத்திற்கு பிறகு அவருடைய கையில் வலி ஏற்பட்டு செல்போனை பிடித்திருக்கும்பொழுது கையை எவ்வாறு வைத்திருந்தாரோ அது போலவே மாறி செயலிழந்துள்ளது.

இதனை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அப்பெண்ணுக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்த அவருக்கு டெனோசினோவிடிஸ் (tenosynovitis) என்ற நோய் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். மேலும், பல மணி நேரம் தொடர்ந்து ஒரே வேலையை செய்தால் இந்த நோய்ப் பாதிப்பு வரும் என வும் தெரிவித்தனர்.

## தற்கொலைத் தாக்குதலில் ஆப்கானில் ஏழு பேர் சாவு!

ஆப்கானிஸ்தானில் முக்கிய சிறைக்கு வெளியே இடம்பெற்ற தற்கொலைப்படை தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் கிழக்கு பகுதியில் புல்–இ–சார்கி என்கிற மிகப்பெரிய சிறை உள்ளது.

தலீபான் பயங்கரவாதிகள் உள்பட நூற்றுக்கணக்கான பயங்கரவாதிகள் புல்-இ-சார்கி சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை கைதிகளின் உறவினர்கள் அவர்களை பார்ப்பதற்காக சிறையின் நுழைவாயில் அருகே காத்துக்கொண்டிருந்தனர். அவர்களை பொலிஸார் சோதனை செய்து கொண்டிருந்தனர்.



அப்போது அங்கு பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதனால் அங்கு பெரும் பதற்றமான சூழல் உருவானது. சிறைக்கு வெளியே நின்று கொண்டிருந்தவர்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள நாலாபுறமும் சிதறி ஓடினர்.

எனினும் குண்டுவெடிப்பில் சிக்கி சிறை ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் படை வீரர்கள் உள் பட 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிர் இழந்தனர்.

இந்தத் தாக்குதல் குறித்து உள்துறை அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் நஜீப் தனிஷ் கூறுகையில், "இது ஒரு தற்கொலைப்படை தாக்குதல். சிறை ஊழியர்கள் வந்த பஸ்ஸைக் குறிவைத்துத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டு உள்ளது. இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் உடனடியாக பொறுப்பேற்கவில்லை" என்றார்.

# வீழ்ந்த இந்தோனேசிய விமானத்தின் கறுப்புப் பெட்டி கடலிலிருந்து மீட்பு

ஜகர்த்தா,நவ.02

விபத்துக்குள்ளான இந்தோனேசிய விமானத்தில் இருந்து கறுப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் விபத்து ஏற்பட்டதற்கான காரணம் விரைவில் தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தோனேசியாவில் லயன் ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் கடலில் விழுந்து மூழ்கியதில் 189 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர். விமானத்துக்கும் விமானக் கட்டுப்பாட்டு அறைக்கும் உள்ள தகவல் தொடர்பு பதிவின்படி அந்த விமானம் விபத்துக்குள்ளானபோது 3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது தெரியவந்தது.

அதையடுத்து, ஜகார்த்தாவின் இந்தியப் பெருங்கடல் பகுதியின் வடகடலில் உள்ள தன்ஜங் பிரியோக் என்ற இடத்தில் விமானத்தின் உடைந்த பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மீட்புப் படையினர், கடற்படையினர் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்று தேடுதல் நடவடிக்கையைத் தொடங்கினர். அதிநவீன மீட்பு ஹெலிக்கொப்டர்கள் மூலமும் தேடுதல் பணிகள் நடைபெற்றன. மீட்புப்பணிகளில் இந்தோனேசியக் கடற்படையைச் சேர்ந்த கேஆர்ஜ ரிஜெல்-933 என்ற கப்பல் ஈடுபட்டது. சுமார் 40 ஆழ்கடல் நீச்சல் வீரர்கள் கடலில் இறங்கித் தேடினர்.

அதைத் தொடர்ந்து விமானம் விழுந்த பகுதியில் பயணிகளின் ஹேண்ட் பேக்குகள், அடையாள அட்டைகள், செல்போன்கள், டிரைவிங் லைசன்ஸ் உள்ளிட்ட உடைமைகள் கடலில் மிதக்கின்றமையை மீட்புப் படையினர் கண்டுபிடித்து அவற்றைக் கைப்பற்றினர்.



விபத்து நடந்தபோது விமானி அறையில் நடந்த உரையாடல்கள் விமானத்தில் உள்ள கருப்புப் பெட்டியில் (பிளாக் பாக்ஸ்) பதிவாகி இருக்கும். இதையடுத்து, விமான விபத்து நடந்த கடல் பகுதியில் கருப்புப் பெட்டியைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்நிலையில் கருப்புப் பெட்டியைக் கைப்பற்றியுள்ளதாக ஆழ்கடல் நீச்சல் வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து தொலைக்காட்சி நிறுவனத்திடம் பேசிய ஹேந்திரா என்னும் வீரர், "கருப்புப் பெட்டி கடலின் அடியில், மண்ணுக்கடியில் புதைந்திருந்தது. அதைத் தோண்டியெடுத்துக் கண்டுபிடித்துள்ளோம். அது ஆரஞ்சு நிறத்தில் பழுது படாமல் இருந்தது" என்றார்.

கருப்புப் பெட்டி விமானத்தின் தகவல்களைப் பதிவு செய்யும் சாதனமா அல்லது விமானி அறை (காக்பிட்) உரையாடல்களைப் பதிவு செய்யும் சாதனமா என்பது இன்னும் தெரியவில்லை. பொதுவாக இவை இரண்டுமே கருப்புப் பெட்டியாகக் கருதப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து விபத்துக்கான காரணங்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# இந்திய ஊடகங்களின் பார்வையில் இலங்கையின் அரசியல் குழப்பம்

இலங்கையின் அரசியல் குழப்பங்கள் இந்தியாவில் பரவலான கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், இந்தியாவின் பிரதான ஆங்கில நாளிதழ்கள் பலவும், இந்த விவகாரம் குறித்து ஆசிரியர் தலையங்கங்களை வரைந்துள்ளன. முக்கிய இந்திய நாளிதழ்களின் ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பு இது.

சிறிசேன எதற்குத் துணிந்து நிற்கிறார்?

(டெக்கான் ஹெரால்ட் ஆசிரிய தலையங்கம்)

இலங்கையில் அரங்கேறியிருக்கும் அரசியல் நாடகம் நிச்சயமற்ற நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. அதன் தாக்கங்கள் கடல்கடந்தும் உணரப்படும்.

தேசிய ஐக்கிய அரசில் இருந்து தனது கட்சியை விலக்கிக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்ததன் மூலமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறார்.

பதவிநீக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் நடவடிக்கை அரசமைப்புக்கு முரணானது என்று கூறியிருக்கிறார். இலங்கையின் அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதியல்ல, நாடாளுமன்றமே பிரதமரைப் பதவியிலிருந்து அகற்றமுடியும். அதனால் விக்கிரமசிங்கவை சிறிசேன பதவி நீக்கியது சட்டவிரோதமானது.

106 ஆசனங்களுடன் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியே நாடாளுமன்றத்தில் கூடுதலான ஆசனங்களைக் கொண்ட கட்சியாக விளங்குகிறது. சிறிசேனவுக்கும் ராஜபக்ஷவுக்கும் 95 எம்.பி.க்களின் ஆதரவே இருக்கிறது.

விக்கிரமசிங்கவைப் பதவி நீக்கியதற்கு அடுத்தநாள் சிறிசேன நாடாளுமன்றத்தை நவம்பர் 16 வரை இடைநிறுத்தும் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்.சாதாரண பெரும்பான்மை ஆதரவுடன் அரசாங்கத்தை அமைப்பதற்கு தேவையான எம்.பி.க்களின் எண்ணிக்கை இல்லாத நிலையில், நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றுக்கு முகங்கொடுப்பதை முன்கூட்டியே தவிர்ப்பதற்கும் விக்கிரமசிங்கவின் பக்கத்தில் நிற்கும் எம்.பி.க்களை ராஜபக்ஷ தனது பக்கத்துக்கு இழுப்பதற்கு காலஅவகாசத்தைக் கொடுப்பதற்காகவுமே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை இடைநிறுத்தினார்.

இலங்கைத் தீவில் விவகாரங்கள் ஒரு முழுவட்டத்தைச் சுற்றிவந்து நிற்கின்றன. 2014 டிசெம்பர் வரை நண்பர்களாக இருந்த சிறிசேனவும் ராஜபக்ஷவும் 2015 ஜனவரி ஜனாதிபதி தேர்தலில் எதிரிகளாக மாறினார்கள்.ராஜபக்ஷவை எதிர்த்து அந்தத் தேர்தலில் சிறிசேன போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இப்போது அவர்கள் இருவரும் விக்கிரமசிங்கவைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு திரும்பவும் நண்பர்களாகியிருக்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ராஜபக்ஷ அதிகாரத்துக்கு மீண்டும் வந்திருக்கின்றமை இந்தியாவுக்கு கவலையை ஏற்படுத்தக் கூடியதாகும். அவரது ஆட்சிக்காலத்தின் போதுதான் இலங்கையில் சீனா அதன் செல்வாக்கை வலுவாகக் கட்டியெழுப்ப அனுமதிக்கப்பட்டது; இலங்கை, சீனாவின் கேந்திரமுக்கியத்துவச் சொத்தாகியது.

ராஜபக்ஷ அண்மைய மாதங்களில் இந்தியாவுக்கு எதிரான பேச்சுக்களைக் குறைத்துக் கொண்டாலும் கூட புதுடில்லி எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகும். ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்துக்கு வந்திருப்பதை ஆதரித்து சீனா அவரை ஏற்கனவே வாழ்த்தியிருக்கிறது. சிறிசேனவும் ராஜபக்ஷவும் கூட்டாக ஆட்சியதிகாரத்தில் இருக்கும் நிலையில், இலங்கையில் தனது முதலீடுகளினதும் நலன்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் என்று சீனா உணருகிறது.

இந்தியா மிகவும் எச்சரிக்கையுடனே நடந்து கொள்ளவேண்டும். இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான உணர்வுகளைக் கிளறிவிடக் கூடிய நடவடிக்கைகளில் சிறிசேனவும் ராஜபக்ஷவும் தீவிரமாக இறங்கக் கூடிய சாத்தியப்பாட்டை நிராகரிக்கமுடியாது.

இந்தியாவின் புலனாய்வு நிறுவனமான ' றோ ' தன்னைக் கொலை செய்வதற்குச் சதி செய்வதாகக் கடந்த வாரம் சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து குற்றஞ்சாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறான குற்றச்சாட்டை அவர் முன்வைத்தது ராஜபக்ஷ ஆட்சியதிகாரத்துக்கு வருவதற்கேதுவாக கள நிலைவரங்களை தயார் செய்வதற்காகவா?

சிறிசேனவும் ராஜபக்ஷவும் அண்மைய நிகழ்வுப் போக்குகளை நியாயப்படுத்து வதற்காக சிங்கள தேசியவாத சக்திகளை அணி திரட்டுவதில் மும்முரமாக இறங்கு வர் என்று எதிர்பார்க்கலாம். எதிர்வரும் நாள்களில் இந்தியாவைக் குற்றஞ்சாட்டு வது சிங்கள அரசியல்வாதிகளுக்கு வசதியான கருவியாக மாறலாம்.

இலங்கையில் ஒரு கட்சியை அல்லது ஒரு அரசியல்வாதியை இந்தியா ஆதரிக்குமேயானால், உள்நாட்டு விவகாரங்களில் அது தலையீடு செய்கின்றது என்று இலங்கையர்கள் குற்றஞ்சாட்டுவதற்கு இடம் கொடுப்பதாகி விடும்.

எனவே இலங்கையில் தற்போதைய குழப்பநிலை தணியும் வரை இந்தியா அந்நாட்டு விவகாரங்களில் முனைப்புக் காட்டுவதைத் தவிர்க்கவேண்டும்.தற்போதைய நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வது இலங்கையின் வேலை. அந்த தீவு கேந்திர முக்கியத்துவமுடைய ஓர் அயல்நாடாகும்.

இந்தியா ஏற்கனவே அங்கு அதன் செல்வாக்கை இழந்து விட்டது.எந்த கட்சி அரசை அமைக்கிறதோ, எவர் பிரதமர் பதவியில் அமருகிறாரோ அவர்களுடன் காரியமாற்றுவதற்கு இந்தியா தன்னைத் தயார்ப்படுத்தவேண்டும்.

( 29 ஒக்டோபர் 2018)

* * *

தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய அரசியல் நெருக்கடி

(த ஹிந்து ஆசிரிய தலையங்கம்)

ஆளும் கூட்டணியில் இருந்து தனது கட்சியை விலக்குவதற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குப் பதிலாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நியமிப்பதற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவு நாட்டைப் பெரும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளிவிட்டிருக்கிறது.

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை நவம்பர் 16 வரை இடைநிறுத்துவதற்கு ஜனாதிபதி மறுநாள் பிறப்பித்த உத்தரவினால் நிலைமை மேலும் சிக்கலாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சிறிசேனவுக்கும் பிரதமர் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான உறவுகள் விரைவாகச் சீர்குலைந்து கொண்டிருந்தன என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியமாகும். அத்துடன் ராஜபக்ஷவுடன் கூட்டுச் சேருவதற்கு அவருடன் சிறிசேன பேச்சு நடத்தக்கூடும் என்பதற்கான அறிகுறிகளும் தெரிந்தன.

ஆனால், அவரின் சடுதியான இரகசியத் தந்திரோபாயம் மூத்த அரசியல்வாதிகள் உட்பட சகலரையும் நினைக்க முடியாத அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது. அரங்கேற்றப்பட்டிருக்கின்ற அரசியல் நாடகத்தின் விவரங்கள் விரிவாகத் தெரியவரும் முன்னதாகவே ராஜபக்ஷ முதல்நாள் வரை தனது பிரதம அரசியல் எதிரியாக விளங்கிய ஜனாதிபதி முன்னிலையில் மகிழ்ச்சியுடன் பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

தன்னைப் பதவிநீக்கம் செய்தமை அரசமைப்புக்கு முரணானது என்று கூறியிருக்கும் விக்கிரமசிங்க இன்னமும் தானே பிரதமராக பதவியில் தொடருவதாக வலியுறுத்துகிறார்.225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் தனக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதாக நம்பிக்கையுடன் கூறுகின்ற அவர், சபையில் வாக்கெடுப்பை நடத்துமாறு ராஜபக்ஷ – சிறிசேன கூட்டுக்கு சவால்விடுத்திருக்கிறார்.

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை இடைநிறுத்தியதன் மூலமாக, ஜனாதிபதி சிறிசேன நாடாளுமன்றத்தில் தேவையான ஆதரவைப் பெறுவதில் தனக்கிருக்கும் பலவீனத்தை அம்பலப்படுத்தி விட்டார் என்றே தோன்றுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களைவிலைபேசும்நடவடிக்கைகளும் அரசியல் விசுவாசம் கேள்விக்குள்ளாகக்கூடிய வியூகங்களும் முன்னெடுக்கப்படக் கூடிய அடுத்த இரு வாரங்களும் மிகவும் இக்கட்டானவையாக இருக்கும். இவையெல்லாம் இலங்கை அரசியலில் ஒன்றும் புதுமையானவையுமல்ல.

ஆனால்,முற்றுமுழுதாக சிறிசேனவின் செயற்பாடுகளின் விளைவாகவே தோற்றுவிக்கப்பட்டிருக்கும் அரசியல் கொந்தளிப்பு உண்மையில் தவிர்க்கப்பட்டிருக்கக் கூடியதே. இலங்கை நாணயத்தின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சி கண்டு வரும் நிலையில் தோன்றியிருக்கும் பொருளாதார நெருக்கடி, அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் இந்த அரசியல் நெருக்கடி மூண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தி விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்து விலக்காமலேயே ராஜபக்ஷவை பிதமராக நியமித்த சிறிசேனவின் செயல் அப்பட்டமான நிறைவேற்று அதிகாரத் துஷ்பிரயோகமே அன்றி வேறொன்றுமில்லை.

குறுகிய அரசியல் நலன்களினால் தூண்டப்பட்டு ஜனாதிபதி மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் நாடாளுமன்றச் செயன்முறைகளை அவர் அவமதித்திருக்கிறார் என்பதையே பிரகாசமாக வெளிக்காட்டுகின்றன.இந்த அவசர நடவடிக்கைகளில் அவர் நாட்டம் காட்டியதன் மூலமாக ஜனநாயகத்தை பாரதூரமான ஆபத்திற்குள் தள்ளிவிட்டிருப்பது மாத்திரமல்ல, 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரித்த தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினத்தவர்களில் கணிசமான பிரிவினர் உட்பட இலங்கையர்களை ஏமாற்றியும் விட்டார்.

அரசியல் செல்வாக்கைச் சோதித்துப் பார்ப்பதற்கான சிறந்த அரங்கு நாடாளுமன்றமேயாகும். நாடாளுமன்றச் செயன்முறைகளுக்கு புறம்பான அதிகாரப் போராட்டம் ( அதுவும் சட்டவிரோத வழிமுறைகளின் மூலமாக) அரசியல் குண்டர் வன்முறைகளையும் குழப்ப நிலையையுமே அதிகரிக்கும்.

மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரின் வன்முறைகளில் இருந்தும் இரத்தக் களரியில் இருந்தும் படிப்படியாக மீண்டு கொண்டிருக்கின்ற இலங்கை பொருளாதார – சமூகச் சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில்,2015 ஆம் ஆண்டில் திறந்துவிடப்பட்ட ஜனநாயக வெளியில் இருந்து பின்னோக்கிச் செல்வதைத் தாங்கமாட்டாது.

ராஜபக்ஷவின் ஒரு தசாப்தகால எதேச்சாதிகார ஆட்சிக்குப் பிறகு ஜனநாயகப் பாதைக்கு நாட்டை மீண்டும் கொண்டு வரப்போவதாக வாக்குறுதியளித்த பிரத்தியேகமான அரசியல் கூட்டணியொன்றிலேயே சிறிசேனவும் விக்கிரமசிங்கவும் ஒன்றிணைந்தார்கள்.

ராஜபக்ஷவைக் கைவிட்டு அரசில் இருந்து வெளியேறி எதிரணியின் பொது வேட்பாளராகக் களமிறங்கி அவரைத் தோற்கடித்த சிறிசேன மீண்டும் அதே ராஜபக்ஷவுடன் கைகோர்ப்பதில் இருக்கக் கூடிய விசித்திரம் ஒருபுறமிருக்க, எந்த சுத்துமாத்து வழியில் என்றாலும் அதிகாரத்தை வலுப்படுத்துவதற்கு சிறிசேன கொண்டிருக்கு ஆசை மிகவும் துரதிர்ஷ்ட



# கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்

## பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு



வருடத்தில் எத்தனையோ நாள்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் தைப் பொங்கலே தமிழர்களின் தேசியப் பொங்கல் திருநாளாகப் போற்றப்படு கின்றது. அதேபோன்று, வருடத்தில் எல்லா நாட்களிலும் மரங்களை நடுகை செய்ய இயலுமெனினும் கார்த்திகை மாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்தி கையில் மரங்களை நடுகை செய்தல் தேசத்தைக் குளிரச் செய்யும்சூழலியற் செயல் மாத்திரம் அல்ல தமிழ்த் தேசியத் தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒரு தேசியச் செயற்பாடும் ஆகும் என்று தமிழ்த் தேசியப்பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச் சருமானபொ. ஐங்கரநேசன் தெரிவித் துள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதம் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் ஊட கங்களுக்கு நேற்று அனுப்பி வைத்தி ருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

வடமாகாண சபை 2014 ஆம் ஆண்டு நிறைவேற்றிய தீர்மானத்துக்கு அமைவாக ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் வடக்கு மாகாண மரநடுகை மாதமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ்மக்கள் இம்மாதத்தில் மரநடுகையை ஒரு சம்பிரதாயபூர்வமான சடங்காக அல்லாமல், உணர்வெழுச்சியுடன் கூடிய ஒரு தமிழ்த் தேசியச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டியது அவசியம் ஆகும்.

இன்று உலகளாவிய ரீதியில் பூமி யின் வெப்பநிலை அதிகரித்துக் கால நிலையில் பாதகமான மாற்றங்கள் ஏற் பட்டுவருகின்றன. இலங்கையின் வறண்ட வலயமானவடக்கிலும் வெம்மையின் கொடுமையை நாம் தற்போது கூடுதலாக அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். இதனால், எமது எதிர்கால சந்ததியினரின் இருப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு, வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான வளியில் அதிகரித்துச் செல்லும் கரியமில வாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங் களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் இன்று தள்ளப்பட்டுள் ளோம்.

மரநடுகையைப் பெருமளவில் மேற் கொள்வதற்குப் பெயரிலேயே 'கார்' என்று மழையின் பெயரைக் கொண்ட கார்த் திகை மாதமே மிகப்பொருத்தமான மாத மாகும். இம்மாதப் பகுதியிலேயே வடக்கு கூடுதலான மழை வீழ்ச்சியைப் பெறு கின்றது. இந்தப் புவியியற் காரணிக்கும் அப்பால், ஈழத் தமிழர்களின் வாழ்விய லில் கார்த்திகை மாதம் தனித்துவ மான இன்னுமொரு சிறப்பினையும் கொண்டுள்ளது. இம்மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த வீரமறவர் களைக் கூட்டாக நினைவிற் கொள்ளும் நாள் அடங்குகிறது. மரவழிபாட்டைத் தமது தொல் வழிபாட்டு முறையாகக் கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து, அவற்றை உயிருள்ள நினைவுச் சின் னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபையும் கொண்டிருக்கின்றனர்.

தேசியம் என்பதுவெறுமனேதட்டை யான ஓர் அரசியற் சொல்லாடல் அல்ல. இது ஒரு இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, மதநம்பிக்கைகள் ஆகிய கூறுகளின் திரட்சியான ஒரு வாழ்க்கை முறையாகும். அந்தவகையில், கார்த்திகை மாத மரநடுகை என்பது சூழலியல் நோக்கிலும் தமிழ்த்தேசிய நோக்கிலும் சிறப்பான ஒன்றாகும்.

வருடத்தில் எத்தனையோ நாட்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் தைப் பொங்கலே தமிழர்களின் தேசியப் பொங்கல் திருநாளாகப் போற றப்படுகின்றது. அதேபோன்று, வருடத்தில் எல்லா நாள்களிலும் மரங்களை மர நடுகை செய்ய இயலுமெனினும் கார்த்தி கை மாத மர நடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்திகையில் மரங்களை நடுகை செய்தல் தேசத்தைக் குளிரச் செய்யும் சூழலியற் செயல் மாத்திரம் அல்ல தமிழ்த் தேசியத் தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒருதேசியச்செயற்பாடும் ஆகும். எனவே இப்புனித கார்த்தி கையில் ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக் கொருவரம் பெறுவோம்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மலையக தோட்டத் தொழிலாளர்களுக்காக யாழ். சித்த மருத்துவ மாணவர் போராட்டம்




யாழ்ப்பாணம், நவ. 02

'உழைக்கும் கரங்களை உதாசீனம் செய்யாதே' 'மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கு' உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்ட மொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைதடியில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை மாணவர்களின் ஏற்பாட்டில் மருத்துவத்துறை வளாகத்திற்கு முன்பாக ஏ-9 வீதியில் நேற்று நண்பகல் 12 மணிக்கு இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டுமென வலியுறுத்தித்தொடர்ச்சியான போராட்டங்களைமுன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டத்திற்கு வடக்கு,கிழக்கு உட்பட நாட் டின் பல இடங்களி லிருந்து பலரும் ஆதரவைத் தெரி வித்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே சித்த மருத்துவ மாணவர்களும் தமது ஆதரவைத் தெரிவித்து நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

உழைப்புக்கேற்ப ஊதியத்தைக் கொடு, உழைக்கும் கரங்களை உதாசீனம் செய்யாதே, ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு தீபாவளிக்கு முன்னதாக வழங்க வேண்டும் - உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பதாகைகளைத் தாங்கியவாறு அவர்கள் கோசங்களையும் எழுப்பி யிருந்தனர். (ஐ)

# நல்லூர் ஆலய சூழலில் வீதித் தடை அறிவிப்பு

நல்லூர் கந்தசுவாமி கோயில் கந்தசஷ்டி உற்சவகால சுவாமி வீதி யுலா மற்றும் சூரசம்கார நிகழ்வுகளை முன்னிட்டு, எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை, ஆலயச் சூழலின் ஊடாக வாகனப் போக்குவரத்து குறிப்பிட்ட நேரங்களில் தடைசெய்யப்படவுள்ளது என்று யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவ ஆனோல்ட் அறிவித்துள்ளார்.

இக்காலப்பகுதியில் ஆலயச் சூழலில் ஏற்படும் பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் வருகின்ற வாகனங்களுக்கும் யாழ்ப்பாணத்தி லிருந்து பருத்தித்துறை வீதி வழியாகச் செல்லும் வாகனங்களுக்கு மான மாற்றுப்பாதை ஒழுங்கு வழமை போல் நடை பெறும்.

போக்குவரத்து தடைப்படும் நேரம் வருமாறு:-

* 18ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை - மாலை 5.30 முதல் 6.30 வரை.
* 13 ஆம் திகதி - பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணிவரை.
* 14 ஆம் திகதி - மாலை 5.30 முதல் 6.30 வரை.

# நாவலர் குருபூசை தின சைவ வினா விடைப்பரீட்சை

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக்கழகம், சைவச்சிறார்களின் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையை முன்னிட்டு சைவ வினா விடைப் பரீட்சையை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக்கல்லூரியில் காலை 9 மணி முதல் நடத்தவுள்ளது.

இப்பரீட்சை தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையிலான பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை தரம் 1, இற்கு காலை 9மணிக்கும், தரம் 3, 4இற்கு காலை 10 மணிக்கும், தரம் 5இற்கு மு.ப 11 மணிக்கும் நடைபெறும் எனவும் இப்பரீட்சைக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 500 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் எனவும், பரீட்சார்த்திகள் குறித்த நேரங்களுக்கு சமுகம் தர வேண்டும் எனவும் சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (ஐ)

# ஈ- சிற்றி விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இயங்கிவரும் ஈ-சிற்றி ஆங்கிலக்கல்லூரியில் ஆங்கிலம், சிங்கள, கணினிப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்தோருக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கல் லூரியின் அதிபர் தேசகீர்த்தி லயன். ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் கலாநிதி. நா. சண்முகலிங்கன் மற்றும் திருமதி. கௌரி சண்முகலிங்கன் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் ஈ-சிற்றி ஆங்கில கல்லூரியின் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ)

### அன்பொளி கல்வியக பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வீதி, அன்பொளி கல்வியகத்தில் கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சையில 150 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாண வர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு - யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடி சரஸ்வதி மண்ட பத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடை பெறும்.

பிரதம விருந்தினர்களாக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஓய்வு நிலை அதிபர் சு. தியாகலிங்கம் யாழ். தேசிய கல்வியற்கல்லூரி ஓய்வுநிலை உப பீடாதிபதி திருமதி கலாநிதி ஜெயமலர் தியாகலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

# தேசோதய உறுப்பினருக்கான ஒன்றுகூடல் நாளை

எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடை பெறவிருக்கும் தேசோதய தேசிய மாநாட்டில் ஒவ்வொரு வட்டாரத்தி கும் ஒவ்வொரு பிரதிநிதி என்ற வீதம் பங்கு கொள்ளலாம் என அறி விக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ் மாவட்டத்தை சேர்ந்த அனைத்து பிரதேசங்களிலுமுள்ள வட்டார உறுப்பினர்கள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் மாவட்ட சர்வோதய தலைமைக் காரியாலயத்தில் தேசோதய சர்வோதய அமைப்பாளர்கள் பங்குகொள்ளும் நிகழ்வில் கலந்து கொண்டு தேசிய மாநாட்டில் பங்குபற்றுபவர்களுடைய பெயர் பட்டியலை தந்துதவுமாறு தேசோதயத்தின் தலைவர் நா. தனேந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பாகிஸ்தான் ‘திறில்’ வெற்றி




நியூசிலாந்து அணிக்கெதிரான முதல் ரி-20 போட்டியில் பாகிஸ்தான் அணி திறில் வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்காக ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ள நியூசிலாந்து அணி, மூன்று ரி-20 போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டிகள், மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இந்தச் சுற்றுப் பயணத்தில் முதலாவதாக மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெறுகின்றது.

இதன் முதல் ரி-20 போட்டி, நேற்று முன் தினம் அபுதாபியில் நடைபெற்றது.

இரு அணிகளுக்கிடையிலான இப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 148 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் பாகிஸ்தான் அணி சார்பில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக, மொஹமட் ஹபீஸ் 45 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ஆடம் மில்ன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து, 149 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய நியூசிலாந்து அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 146 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் பாகிஸ்தான் அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தால் திறில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில். பாகிஸ்தான் அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

இதன்போது நியூசிலாந்து அணியின் அதிகபட்ச ஓட்டமாக கொலின் முன்ரோ 58 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ஹசன் அலி 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, பாகிஸ்தான் அணி சார்பில் 36 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 5 பவுண்ரிகள் அடங்கலாக 45 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட மொஹமட் ஹபீஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 போட்டி, இன்று டுபாயில் நடைபெறவுள்ளது.

# தலையில் பந்து தாக்கி இலங்கை அணி வீரர் மருத்துவமனையில்



இங்கிலாந்து - இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டத்தின்போது களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த இளம் வீரர் பதும்நிசங்கவின் தலையைப் பந்து தாக்கியதால் அவர் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சோர்ட்லெக் பகுதியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தவேளை இங்கிலாந்து அணியின் ஜோஸ் பட்லர் அடித்த பந்து நிசங்கவின் தலையைத் தாக்கியுள்ளது.

அவர் பந்தை தவிர்க்க முயன்றவேளையே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பதும் நிசங்க ஹெல்மெட் அணிந்திருந்தபோதிலும் அவர் உடனடியாக தலையைப் பிடித்தபடி நிலத்தில் விழுந்துள்ளார்.

இதனை அவதானித்த இங்கிலாந்து அணியின் மருத்துவர் களத்துக்குள் ஓடிவந்துள்ளார். எனினும் நிசங்க 20 நிமிடங்கள் நினைவற்ற நிலையில் காணப்பட்டுள்ளார்,அதனைத் தொடர்ந்து அவர் ஸ்டெரச்சர் மூலம் மைதானத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டுள்ள அம்புலன்ஸின் உதவியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதும் நிசங்க சுயநினைவை இழக்கவில்லை. ஆனால் கழுத்தில் வலி உள்ளதாகத் தெரிவிக்கின்றார் எனத் தகவல்கள் வெளியாகின்றன.

அவர் சுயநினைவுடன் காணப்படுகின்றார். அச்சப்படுவதற்கான அவசியமில்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளோம் என இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அணியின் பயிற்றுவிப்பாளர் அவிஸ்க குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பட்லர் அடித்த பந்து பதும் நிசங்கவின் தலைக்கவசத்தில் பட்டு மத்தியுசின் கையிற்கு சென்றதால் பட்லர் ஆட்டமிழந்தார். அதனை பார்த்துக்கொண்டிருந்த வீரர்கள் பின்னரே பதும் நிசங்கவின் ஆபத்தான நிலையை உணர்ந்திருக்கின்றனர்.

## இந்திய...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே பெருஞ் சேதம் ஏற்படுத்தப்பட்டு விட்டது என்ற போதிலும் கூட, நாடாளுமன்றம் கூடும்போது (சாத்தியமானால் நவம்பர் 16க்கு முன்னர்) நேர்மையான முறையிலான வாக்கெடுப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

(29 ஒக்டோபர் 2018)

* * *

### சீன - இலங்கை உறவுகள் மேலும் நெருக்கமாகும்

(ஹிந்துஸ்தான் ரைம்ஸ் ஆசிரிய தலையங்கம்)

மீண்டும் இந்தியாவின் முக்கிய அயல்நாடொன்று நீண்ட காலத்துக்கு இழுபடக் கூடிய சிக்கலான குழப்ப நிலைக்கான சகல அறிகுறிகளையும்கொண்ட அரசியல் நெருக்கடியொன்றுக்குள் சிக்கியிருக்கிறது.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே குறிப்பாக பொருளாதார விவகாரங்களில் அண்மைய சில மாதங்களாக முறுகல் அதிகரித்து வந்ததது. ஆனால், கடந்த வெள்ளிக்கிழமை மாலை திடீரென விக்கிரமசிங்க பதவி நீக்கப்படுவார் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

விக்கிரமசிங்கவின் பதவி நீக்கம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியதிகாரத்துக்கு மீளவருவதற்கு வழியேற்படுத்தியிருக்கிறது.

கடந்த பெப்ரவரியில் உள்ளூராட்சி தேர்தல்களில் அவரது புதிய கட்சி பெருவெற்றி பெற்ற நாளிலிருந்து ராஜபக்ஷ அரசியல் அதிகார மையத்துக்குத் திரும்பி வருவதற்காக தனது முயற்சிகளைத் தீவிரப்படுத்தியிருந்தார். அவர் பிரதமராக நியமிக்கப்பட்டதற்கு மறுநாள் ஜனாதிபதி சிறிசேன நாடாளுமன்றத்தை நவம்பர் 16 வரை இடைநிறுத்துவதற்கு பிறப்பித்த உத்தரவையடுத்து நெருக்கடி இன்னொரு திருப்பத்தை எடுத்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் தனக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதை நிரூபிப்பதற்கு தனக்கு உடனடியாக வாய்ப்புத் தரப்பட வேண்டும் என்று விக்கிரமசிங்க வலியுறுத்திக் கொண்டிருந்த நிலையிலேயே நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்டது.

விக்கிரமசிங்கவுடனான தனது கூட்டணியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சிறிசேன தீர்மானித்ததும் புதிய பொதுத் தேர்தலை நடத்துவதற்கு வசதியாக நாடாளுமன்றத்தைக் கலைத்திருந்தால் அது சரியான நடவடிக்கையாக இருந்திருக்கும்.

அடுத்த வருட இறுதியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல், அதைத் தொடர்ந்து நடத்தப்பட வேண்டியிருக்கும் பொதுத்தேர்தல் ஆகியவற்றுக்கு முன்னதாக அதிகாரத்தைத் தக்கவைத்து தங்களது நிலைகளை வலுப்படுத்துவதே சிறிசேனவினதும் ராஜபக்ஷவினதும் பிரதானமான அக்கறை என்பதை நிகழ்வுப்போக்குகள் தெளிவாக உணர்த்துகின்றன.

கால் நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக நீடித்த உள்நாட்டுப் போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த ராஜபக்ஷ போர்க்குற்றங்கள், ஊழல் மோசடி மற்றும் குடும்ப அரசியல் ஆதிக்கம் தொடர்பில் குற்றச்சாட்டுகளுக்கு தொடர்ச்சியாக முகங்கொடுக்க வேண்டியவராக இருக்கிறார்.ஆனால், தான் எந்த தவறையும்செய்யவில்லைஎன்று அவர் மறுத்து வருகிறார்.

அவரது மீள்வருகை அரசியல்எதிரிகளையும்ஊடகங்களையும் ஒடுக்குமுறைக்குள்ளாக்கிய ஒரு யுகத்துக்கு நாடு மீண்டும் திரும்பிச் செல்லக்கூடும் என்ற பீதியைச் சில வட்டாரங்களில் ஏற்கனவே கிளப்பியிருக்கிறது.

உள்நாட்டுப் போரில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசபடைகள் கண்ட வெற்றிக்கு அரசியல் தலைமையை வழங்கியவர் என்ற காரணத்தால் இலங்கையில் தொடர்ந்து மிகுந்த செல்வாக்குடையவராக விளங்கும் ராஜபக்ஷ சீனாவுக்கு மிகவும் நெருக்கமானவராக நோக்கப்படுகிறார்.

கடந்த மாதம் இந்திய உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக அவர் புதுடில்லிக்குப் பயணம் செய்திருந்தார் என்றபோதிலும் விக்கிரமசிங்கவே இந்தியாவுக்கு மிகவும் நெருக்கமானவராகக் கருதப்படுகிறார்.

ராஜபக்ஷவின் மீள்வருகை அயல்நாடுகளில் செல்வாக்கைச் செலுத்துவதற்காக சீனாவுடன் இந்தியா கடுமையான போட்டியில் ஈடுபட்டிருக்கும் ஒரு நேரத்தில் பீஜிங்கிற்கும் இலங்கைக்கும் இடையேயான உறவுகள் மேலும் நெருக்கமடைய வழிவகுக்கலாம்.

கடன்பொறி யொன்றுக்குள் இலங்கை ஆழமாக விழுந்துவிடக் கூடுமென்ற அச்சத்துக்கு மத்தியிலும் ராஜபக்ஷ மீண்டும் முக்கியமான திட்டங்களுக்கு நிதியுதவியைப் பெறுவதற்காக சீனாவை நாடக்கூடும்.கொழும்பு நிலைவரங்களை இந்தியா உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது என்று அதிகாரிகள் கூறியதைத் தவிர இலங்கை அரசியல் நெருக்கடி குறித்து உத்தியோகபூர்வமாக இந்தியா இதுவரை பிரதிபலிப்பை வெளிப்படுத்தவில்லை.

இலங்கையின் நிலைவரங்களைக்கையாளுகின்றபோது இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை வகுப்பாளர்கள் இவ் வருட ஆரம்பத்தில் மாலைதீவில் ஏற்பட்ட அரசியல் உறுதியின்மையில் இருந்து பெற்ற படிப்பினைகளை மனதிற்கொண்டுசெயற்படவேண்டியது அவசியமானதாகும்.

(29 ஒக்டோபர் 2018)

## பெரும்பான்மையை நிரூபி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் பிரதமர் பதவியை வழங்கமாட்டோம் என்று கூறுரைத்துள்ளார் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

நேற்று ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

நாடாளுமன்றம் கூட்டப்பட்டிருப்பதால், பெரும்பான்மையை காண்பிப்பதற்குச் சாத்தியம் இல்லை.

ஜனாதிபதிக்குப் பிரதமரை நீக்கும் அதிகாரம் உள்ளது, அல்லது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து, பெரும்பான்மை வாக்குகளின் மூலம் நிறைவேற்றி அகற்ற முடியும்.

ஆனால், அரசமைப்பில் எந்த இடத்திலும், நாடாளுமன்றப் பெரும்பான்மை நிரூபிக்கப்பட்டால்தான் பிரதமர் பதவியைப் பெற முடியும் என்று கூறப்படவில்லை – என்றார். (ஐ)

## மஹிந்தவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் சர்ச்சைகள் நீடித்து வரும்நிலையில் புதிய பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயக நேற்றுச் சந்தித்தார்.

பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இராணுவ தளபதி பிரதமரைச் சந்தித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இதன்போது பிரதமர் மஹிந்த இராணுவத் தளபதியுடன் விரிவான பேச்சுக்களிலும் ஈடுபட்டார் எனக் கூறப்படுகின்றது.

இறுதியில் இராணுவத்தளபதியினால் பிரதமருக்கு நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ஐ)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கச் சபாநாயகர் கரு ஜயசூரிய உடன்பட்டுள்ளார்.

அதன்படி எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வின்போது பிரதமருக்கு உரிய ஆசனத்தைப் புதிய பிரதமர் மஹிந்தவுக்கு வழங்குவதற்கு சபாநாயகர் இடையூறாக விளங்கமாட்டார் என்று சபாநாயகர் அலுவலகம் அறிவித்துள்ளது.

பிரதமராக மஹிந்தவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சபாநாயகர் அலுவலகம் குறிப்பிடப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற அதிகாரிகளால் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சபாநாயகரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## கோட்டாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது நாட்டு நிலைமைகள் குறித்து இருவரும் பேசிக் கொண்டனர்.

ரணில்தொலைபேசிஅழைப்பு எடுத்த கையோடு நட்புடன் பதிலளித்த கோட்டாபய நானும் உங்களைத்தொடர்புகொள்ளவே இருந்தேன் என்று கூறினாராம்.

உடனே அது ஏன்? என்று கேட்டார் ரணில்.

இல்லை...அலரிமாளிகையை விட்டு எப்போது கிளம்புவீர்கள் என்று கேட்கத்தான்...! என்று பகிடியாகப் பதிலளித்தாராம் கோட்டா.

பின்னர் இருவரும் அரசியல் நிலைமைகள் குறித்து பேசினர். சர்ச்சைக்குரிய அரசியல் விடயங்கள் எதுவும் பேசப்படவில்லை. நட்புடன் அந்த உரையாடல் முடிந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## ஜனநாயகத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான புதிய அமெரிக்க தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார். அமெரிக்க அரசால் இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்ட அலைனா ரெப்லிட்ஸ் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இலங்கையில் ஓர் அரசியல் குழப்பநிலை ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில் இந்த நாட்டுக்காகப்பணியாற்றுவது தொடர்பில் நான் பெருமையடைகிறேன்.

## நவம்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டபடி எதிர்வரும் 16ஆம் திகதியே அது கூட்டப்படும் என்றும் மஹிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றை எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை கூட்டுவது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னிடம் தெரிவித்தார் என பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ நேற்றுக் காலை கூறியிருந்தார்.

தன்னைச்சந்தித்த பல்கலைக் கழக விரிவுரையாளர்களிடம் மஹிந்த இந்தத் தகவலை வெளியிட்டார். நாடாளுமன்றை திங்கட்கிழமை கூட்டும் முடிவை ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட கட்சிகள் வரவேற்றிருந்த நிலையில் இந்தத் தகவலை மஹிந்தானந்த அளுத்கமகே நேற்றிரவு வெளியிட்டார். (ஐ)

## திங்களன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, சபாநாயகர் செயலகமும் கூட, நாடாளுமன்றத்தைக் கூட்டும் நாள் பற்றி இன்னமும் தமக்குத் தகவல் ஏதும் வழங்கப்படவில்லை என்று கூறியுள்ளது.

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 05ஆம் திகதி அல்லது 07ஆம் திகதி கூட்டுமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்டபோதிலும், இறுதியான முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்றும் சபாநாயகரின் செயலகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, நாடாளுமன்றத்தை எதிர்வரும் 5ஆம் திகதி கூட்டவுள்ளார் என்று ஜனாதிபதி தனக்குத் தெரியப்படுத்தியுள்ளார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை கூறியிருந்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுடன் பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்படி தகவலை வெளியிட்டார்.

ஆயினும், நாடாளுமன்றத்தைத் திங்களன்று கூட்டுவது தொடர்பாக, ஜனாதிபதி இன்னமும் இறுதி முடிவையும் எடுக்கவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

இதேவேளை, சபாநாயகர் கரு ஜெயசூரியவுடன், நான்கு கட்சிகளின் தலைவர்கள் இன்று முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளனர்.

ஐக்கியதேசியக்கட்சி, ஜே.வி.பி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் தலைவர்களே இன்று சபாநாயகரைச் சந்திக்கவுள்ளனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று முற்பகல் 10 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பின்போது சபாநாயகர் கரு ஜெயசூரிய, கட்சித் தலைவர்களுக்கு விளக்கிக் கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

இலங்கையின் சமாதானம் மற்றும் சுபீட்சத்துக்கான பயணத்தில் அமெரிக்கா கடந்த ஏழு தசாப்தங்களாக இலங்கைக்கு ஒத்துழைப்பு நல்கி வருகிறது.

சவால்களுக்குத் தீர்வு காண்பதற்கும் பாதுகாப்பானதும் வெற்றிகரமானதுமான இந்து – பசுபிக் பிராந்தியமொன்றை உறுப்படுத்துவதற்கு எம் முன்னால் இருக்கும் வாய்ப்புகளை இறுகப் பற்றிக் கொள்வதற்கும் ஒன்றுபட்டு பணியாற்றும் இந்தப் பயணத்தில் நானும் உங்களுடன் இணைந்து கொள்ள எதிர்பார்க்கிறேன்–என்றார். (ஐ)

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

அதன்படி 92 ஒக்ரைன் பெற்றோல் 155 ரூபாவில் இருந்து 145 ரூபாவாகின்றது.

இதேவேளை, டீசலின் விலை 7 ரூபாவினாலும் குறைக்கப்பட உள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. எனவே, டீசலின் புதிய விலை 123 ரூபாவில் இருந்து 116 ரூபாவாக குறைவடைகிறது. (ஐ)

## மஹிந்தாவைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரதமராக மஹிந்த நியமிக்கப்பட்டமையைச் சபாநாயகர் ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும், அவருக்குப் பிரதமர் ஆசனம் வழங்கப்படும் என்றும் ஊடகங்களில் வெளியாகிய செய்திகளை அவர் நிராகரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக சபாநாயகர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும்.

சபாநாயகர் செயலகத்தில் இதுபற்றி விசாரித்தோம். மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பிரதமர் ஆசனத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்படவில்லை என்று அங்குள்ள அதிகாரிகள், தெரிவித்தனர். மஹிந்தவை பிரதமராக, சபாநாயகர், ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை என்னால் தெளிவாகக் கூற முடியும் – என்றார். (ஐ)

## நாடாளுமன்றைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுவது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னிடம் தெரிவித்தார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுக் காலை தெரிவித்தார்.

எனினும் திங்கட்கிழமை நாடாளுமன்றைக் கூட்டுவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் மஹிந்த தரப்பு கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும்விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றைத் திங்கட்கிழமை கூட்டும் முடிவை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்றிருந்த நிலையில் இந்தத் தகவல் வெளியியாகியுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றம், எதிர்வரும்திங்கட்கிழமைகூடுவதற்கு வாய்ப்பில்லை என்று, ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடாளுமன்றக் கூட்டத்துக்கான தயார்படுத்தல்களை மேற்கொள்வதற்கு, கால அவகாசம் தேவை. திங்கட்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு கால அவகாசம் போதாது,

திங்கட்கிழமை நாடாளுமன்றம் கூட்டப்படவுள்ளதாக, வெளியாகிய செய்திகள் தவறாக வழிநடத்தப்படுகின்றவையாகும்.

வரும் நவம்பர் 16ஆம் திகதி, புதிய அரசு 2019 வரவு – செலவுத் திட்டத்துக்கான கணக்குகளைத் தாக்கல் செய்யும் – என்றார். (ஐ)

## சீனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலை மீதான தீர்வை 5 ரூபாவாலும் உழுந்து மீதான தீர்வை 25 ரூபாவாலும் கோதுமைத் தானியம் மீதான தீர்வை 3 ரூபாவாலும் குறைக்கப்படுகின்றன. (ஐ)

## பெரும்பான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரயத்தனத்தில் ஈடுபட்டு வருகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளபோதிலும், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை (113 உறுப்பினர்களின் ஆதரவு) நிரூபிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை மஹிந்தவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களைத் தம்பக்கம் வளைத்துப் போடும் முயற்சியில் மஹிந்த – மைத்திரி கூட்டணி தீவிரமாகக் களமிறங்கியுள்ளது. பசில் ராஜபக்ஷ நேரடியாகக் களமிறங்கி இதற்குரிய நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றார். எனினும், பெரும்பான்மைப் பலம் இன்னும் உறுதியாகவில்லை.

சு.க. உறுப்பினர்களில் சிலர் ரணிலுடன் சங்கமிக்கக் கூடும் அல்லது நாடாளுமன்றில் நடுநிலை வகிக்கக்கூடும் என அரசியல் களத்தில் பேசப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்குப் பெரும்பான்மையை உறுதிப்படுத்துவதற்குரிய ஆதரவு இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் குத்துக்கரணம் அடிப்பதால் உறுதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே, தமது உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு ஐ.தே.க ரணில் பெரும்பாடுபட்டு வருகின்றார். இறுதி நேரத்தில் 'பல்டி'கள் அரங்கேறும் என்பதால் அரசியல் களத்தில் குதிரைப் பேரமும் உச்சம் தொட்டுள்ளது. எது எப்படியோ நாடாளுமன்றம் கூடும்வரை அரசியல் களத்தில் பரபரப்புக்கு பஞ்சமிருக்காது எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது நாட்டுப் பிரதிநிதிகளைக்கொண்டு இலங்கையின் அரசியல் தலைவர்களுடன் இரகசியச் சந்திப்புகளை இந்திய மத்திய அரசு நடத்தி வருகின்றது என அறியமுடிகின்றது.

அந்தவகையில், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுடன் இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலாளர்களான லலித் மன்சிங் மற்றும் பேராசிரியர் சுக்டியோ முனி ஆகியோர் நேற்று முன் தினம் கொழும்பில் நடத்தியசந்திப்பின்புகைப்படங்களைக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டது.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித்தலைவரும்தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் வினவியபோது, பேச வேண்டிய விடயங்களை எல்லாம் பேசினேன். இலங்கையில் என்ன நடந்தாலும் அது நாட்டின் அரசமைப்புக்கு இணங்க – நாடாளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலத்துடன் நடைபெறவேண்டும் என்று என்னைச் சந்தித்த இந்தியப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தேன். இந்தியா எமது அயல் நாடு. எனவே, இலங்கை விடயத்தில் இந்தியா நடுநிலையுடன் நிதானமாகச் செயற்பட வேண்டும் என அவர்களிடம் கூறினேன் – என்று பதிலளித்தார். (ஐ)

## பெரும்பான்மைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசியம் இல்லை என்று, அரச இணைப்பேச்சாளரும், அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டின் அரசமைப்பின்படியே, ரணில் விக்கிரமசிங்கவின் பதவி நீக்கமும், புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவின் நியமனமும் மேற்கொள்ளப்பட்டன.

இதில் யாருக்காவது பிரச்சினைஇருந்தால், உயர்நீதிமன்றத்தில் வழக்கைத்தாக்கல்செய்து தீர்ப்பைப் பெற முடியும்.

அரசமைப்பில் எந்த இடத்திலும், 113 உறுப்பினர்களின் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று கூறப்படவில்லை. எனவே, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டியது கட்டாயமல்ல.

எனினும், 113 இற்கும் அதிகமான பெரும்பான்மையை எம்மால் காட்ட முடியும் – என்றார். (ஐ)

## சிறுபான்மைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள்காங்கிரஸ் ஆகிய சிறுபான்மையின கட்சிகளே பிரதான காரணமாகும். நாங்கள் தடம் மாறி இருந்தோமானால், இந்நேரம் நிலைமை தலைகீழாக மாறி இருக்கும் என்று முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் நேற்று தெரிவித்தார்.

எங்கள் சிறுபான்மை கட்சிகளில் உள்ள எம்.பிக்களை விலைகொடுத்து, பதவிகொடுத்து வாங்க எவ்வளவோ முயற்சிகள் நடந்தாலும் அவற்றை நாம் பொறுமையுடன் சமாளித்தோம். மிகப்பெரும் பேரங்களை பெரிய மனிதர்களே நேரடியாகப் பேசினார்கள். எனினும் நாம் விலை போகவில்லை என்றும் அவர் கூறினார்.

மட்டக்குளியில் நடைபெற்ற, ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு, கண்டி, களுத்துறை, கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை மாவட்ட பேராளர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கூட்டத்தில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியவை வருமாறு:

இதுவரை கிடைத்துள்ள தகவலின்படி, மஹிந்த அணிக்கு தாவியுள்ளவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியை சார்ந்த எம்.பிக்கள் ஆவர். ஐக்கிய தேசிய முன்னணியில் உள்ள சிறுபான்மை கட்சி எம்.பிக்களுக்கும் பேரங்களைப் பேசிச் சலசலப்புகளை ஏற்படுத்த மாற்று அணி முயன்றாலும், தலைமைகளின் நிர்வாகத்தால், அந்த முயற்சிகள் பிசுபிசுத்துப் போயுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி பீடம் ஏறுவது என்பது வேறு. ஆனால், நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஓர் ஆட்சியை கலைத்து, பிரதமரையும், அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்து, ஆட்சியைக் கைப்பற்றுவது முறைகேடான செயலாகும். இது இந்நாட்டு ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள சவாலாகும். இதற்கு நாம் துணை போக முடியாது என முடிவு செய்தோம்.

எமது பங்களிப்பு இல்லாவிட்டால், ஐக்கிய தேசிய கட்சி இன்னமும் பலவீனமடைந்து இருக்கும். இதை ஐ.தே.க தலைமைக்கு நாம் அறிவித்துள்ளோம். அவர்களும் இதை இன்று புரிந்துகொண்டுள்ளார்கள். எமது கூட்டு முயற்சி வெற்றி பெற்று நாம் அடுத்த வாரம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என் நான் திடமாக நம்புகிறேன். அந்த ஆட்சியில் எமது இன்றைய பங்களிப்பின் தாக்கம் தெரிய வரும் – என்றார். (ஐ)

# தொடர்கிறது மைத்திரியின் அதிரடி மேலும் சிலர் அமைச்சர்களாயினர்



கொழும்பு, நவ. 02

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் மேலும் சில அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். இது தொடர்பான நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

நீர்ப்பாசனம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சராகத் துமிந்த திசாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். திறன்விருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சராக தயாசிறி ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

அங்கஜன் இராமநாதன் மீண்டும் விவசாய பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இளைஞர், மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சராக பியசேன கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக எம்.எல்.ஏ.எம் .ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டுள்ளார். லக்ஸ்மன் செனவிரத்ன பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றம் மற்றும் விளையாட்டுதுறை இராஜாங்க அமைச்சராக சிறியானி விஜயவிக்கிரம நியமிக்கப்பட்டுள்ளார். கல்வி மற்றும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் மொகான் லால் கிரேரு நியமிக்கப்பட்டுள்ளார்.

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி பிரதி அமைச்சராக இந்திக பண்டார நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். தொழில் மற்றும் வெளிநாட்டுவேலைவாய்ப்பு பிரதி அமைச்சராக மனு நாணயக்கார நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சராக சாரதி துஷ்மந்த நியமிக்கப்பட்டுள்ளார். துறைமுகங்கள் மற்றும் துறைமுக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக நிறந்த முத்துஹெட்டிஹமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சராக காதர் மஸ்தான் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# 4 நாடுகளின் புதிய தூதுவர்கள் மைத்திரியிடம் நியமனக் கடிதம்



கொழும்பு, நவ. 02

அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளின் புதிய தூதுவர்கள் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், தமது நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ், ஜப்பானிய தூதுவர், அகிரா சுகியாமா, பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்டு, ஆப்கானிஸ்தான் தூதுவர், அஷ்ரப் ஹைடாரி ஆகியோரே நேற்று ஜனாதிபதியிடம் நியமனங்கள் தொடர்பான ஆவணங்களைக் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகமவும் கலந்து கொண்டார். (ஐ)







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.